REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 மார்ச் 16 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்
வரு. 89 இல. 64 | March 16,Tuesday, 2021 | 16பக்கங்கள் | 30/-
89 1932 - 2021






தினகரனுக்கு 89 02

உணவு உண்பதற்கும் இடமொன்று இல்லாத பெண் தொழிலாளர்கள் 05



07 அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசியை நெதர்லாந்தும் இடைநிறுத்தியது



தொடரை சமன் செய்தது ஆப்கானிஸ்தான் 16



## சமுர்த்தி பயனாளர்களை தொழில் முனைவோராக மாற்ற திட்டம்

### அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த ஆலோசனை

சமுர்த்தி பயனாளர்களை கடன்கள் மற்றும் நிதி உதவிகளில் மாத்திரம் தங்கி வாழ்வோராக அன்றி தொழில் முனைவோராக சுயமாக முன்னேறக்கூடியவர்களாக மாற்றிய மைப்பதற்கான முறையொன்று அவசியமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (15) தெரிவித்தார்.

சமுர்த்தி, வதிவிட பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் நிதி அமைச்சின் ரன்தொர கேட்போர் கூடத்தில் நடைபெற்ற 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## வெளிநாடுகளில் கைதான நான்கு இலங்கையர்

### நாட்டுக்கு அழைத்துவர ஏற்பாடு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்டுள்ள மேலும் நான்கு இலங்கையரையும், நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் பேராசிரியர் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆணைக்குழு அறிக்கை



## ஏப். 21 க்கு முன் பரிந்துரைகளை அமுலாக்க நடவடிக்கை

### ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக G.L தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆணைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னதாக இந்த விடயத்தில் முன்னேற்றம் ஏற்படுமென தான் 06

இனங்களுக்கிடையே பிரிவு; ஒற்றுமைக்கு குந்தகம்; அமைதிக்கு அச்சுறுத்தல்;

# மத்ரஸா பாடசாலை விடயங்களில் தலையிட அரசுக்கு உரிமை உண்டு



### எதிர்காலத்தில் இத்தகைய பாடசாலைகள் மீது கடுமையான நடவடிக்கை

### கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் மத்ரஸா பாடசாலைகள் முன்னெடுத்துச் செல்லப்படுமானால் அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு முழுமையான உரிமையுண்டென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதில் தலையிட வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்துக்கு உண்டு என சுட்டிக்காட்டியுள்ள பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் அது தொடர்பில் தீர்மானமொன்றை 06

## புதிய கிரிக்கெட் யாப்பு; நீதிமன்றம் விடுத்த உத்தரவு

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அடுத்த தேர்தலுக்கு முன்னர், புதிய கிரிக்கட் யாப்பை தயாரிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் ஆட்சேபனைகள் இருக்குமாயின் 06

## கொழும்பில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி

### www.colombo.mc.gov.lk ஊடாக பதிவு செய்ய வசதி

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்டோர் கொரோனா தொற்றுக்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக இலவசமாக தம்மை பதிவு செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

60 வயதுக்கும் மேற்பட்டோர் எவ்வித சிக்கலுமின்றி கொரோனா தொற்றுக்கான 06

## சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெற இலங்கை முழு முயற்சி

### குழப்பாதிருக்க வடக்கு, கிழக்கு மக்களிடம் தினேஷ் கோரிக்கை



சர்வதேச சமூகத்தின் ஆதரவை அரசாங்கம் இழக்கும் வகையில் வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் செயற்படக் கூடாதென வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன கேட்டுக் கொண்டுள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் பிராந்தியத்தில் தொடங்கப்பட்ட முயற்சிகள் குறித்தும் கருத்து 06

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்க இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும்

### வடக்கு, கிழக்கு விஜயத்தின் போது இந்திய உயர்ஸ்தானிகர்



இந்தியா, 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதற்கு தொடர்ந்தும் வலியுறுத்துமென இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர் அங்கு பல அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார். இதற்கமைய இந்திய 06

## தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் எடுத்துரைப்பு




### அமைச்சர் லொகுகே தலைமையில் ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் பற்றி தெளிவூட்டும் வேலைத் திட்டம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படவுள்ளது. 06

## கிராண்ட்பாஸில் பாரிய தீ விபத்து 50 தற்காலிக வீடுகள் எரிந்து நாசம்



### நேற்று அதிகாலை அனர்த்தம்; தீ கட்டுப்பாட்டில்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று இடம்பெற்ற தீ விபத்தினால் 50க்கும் மேற்பட்ட தற்காலிக வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. கொழும்பு கிராண்ட்பாஸ் நஜீமா தோட்டத்திலேயே மேற்படி தீ அனர்த்தம் நேற்று அதிகாலை 2. 40 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. 06

## 1,000 ரூபா சம்பள விடயம் தாமதப்படுத்தவே கம்பனிகள் வழக்கு;

### புதிய சட்டம் கொண்டு வந்தாவது வழங்குவோம்

ஷம்ஸ் பாஹிம்



தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வழங்கிய 1,000 ரூபா சம்பள உயர்வு சலுகை அந்த மக்களுக்கு கிடைப்பதை தாமதப்படுத்தவே சம்பள உயர்வுக்கு எதிராக தோட்டக் கம்பனிகள் நீதிமன்றத்திற்கு சென்றிருப்பதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

ஆனால் நீதிமன்றம் நியாயத்தை நிலைநாட்டுமென்று நம்பிக்கை தெரிவித்த அவர், ஏதும் சிக்கல் நிலை ஏற்பட்டால் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவந்தாவது தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார். 06

### விக்கல் வீராச்சாமி



என்ன... அரசாங்க அதிபர் கப்பல் கவிழ்ந்தது போல மலைத்துப் போயிருக்கிறார்....?

கச்சேரியில காணிப் பத்திரங்கள் இடம்மாறி போனதுக்கு இவர்தான் காரணமெண்டு சுமந்திரன் ஐயா ஒரு காட்டு காட்டி விட்டாராம்...!!!

அனைவரும் இணைந்து கொழும்பு நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம்!

உங்கள் கழிவுகளை பின்வரும் முறைமைக்கு அமைவாக பிரிந்திடுங்கள்.



உக்கும் கழிவுகள்

உங்கள் இல்லத்தில் சேரும் கழிவுகளில் நீங்கள் உரம் தயாரிக்கவில்லை என்றால் தயவுசெய்து அதை CMC யிடம் கையளிக்கவும்.

- சமையலறை காய்கறி கழிவுகள் மற்றும் பழக்கழிவுகள், எஞ்சிய கழிவுகள், தேங்காய் சக்கைகள், பயன்படுத்திய தேயிலை கழிவுகள், பைகள், முட்டை ஓடுகள், மாமிச கழிவுகள்.
- வீட்டுத்தோட்டத்தில் சேரும் குப்பைகள் மர இலைகள், பூக்கள்
- துண்டாக்கப்பட்ட இளநீர் மட்டைகள்



மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்


பின்வரும் பொருட்கள் சுத்தமாக இருக்கவேண்டும்.

- கண்ணாடிகள்
- கார்ட்போட் / கடதாசி
- சுத்தமான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- உலோகங்கள்
- சுத்தமான தேங்காய் சிரட்டைகள்
- சுத்தமான டின்கள்
- சுத்தமான யோகட் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள்
- மறுசுழற்சி செய்யக்கூடிய சமையலறை உபகரணங்கள்



மறுசுழற்சி செய்யமுடியாத கழிவுகள்

- மண்ணான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- சுகாதார நப்கின்கள்
- அழுக்கான யோகட் கோப்பைகள்
- பால் பேக்கட்டுகள்
- பயன்படுத்திய சஷே பேக்கட்டுகள் (ஷம்பூ, சோஸ், மைலோ மற்றும் பல)
- தலைமுடி
- ஷேவர் மற்றும் பிளேடுகள்
- சுத்தமற்ற டின்கள்
- செரமிக் பாத்திரங்கள்
- இறப்பர்
- மண் பாத்திரங்கள்
- மருந்துப் பொருட்கள்



திண்மக்கழிவு முகாமைத்துப் பிரிவு
கொழும்பு மாநகர சபை
வெப்: www.colombo.mc.gov.lk
தொ.பே: 0112 431 694

மாவட்டம் D2A
கொழும்பு கோட்டை புறக்கோட்டை தவிர்த்து

141, கிருல வீதி, கொழும்பு 05
ஈ-மெ: info@cleantech.lk
தொ.பே: 0112 368 768

cleantech because we care

# தினகரனுக்கு 89


















## தினகரனின் 89 ஆவது ஆண்டு விழா; விமரிசையான கொண்டாட்டம்

இலங்கை தமிழ் பத்திரிகை உலகில் தன்னிகரற்று விளங்கும் தினகரன் தேசிய நாளிதழ் தனது 89 ஆவது பிறந்த தினத்தை நேற்று கோலாகலமாக கொண்டாடியது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி,வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் மிகவும் எளிமையான முறையில் ஆசிரிய பீடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யு தயாரத்ன பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

நிறுவன பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல மற்றும் சகோதர பத்திரிகைகளான தினமின, டெய்லி நியூஸ் மற்றும் சிலுமின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், ஆசிரிய பீட உறுப்பினர்கள், சக பிரிவு ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீண்டகாலம் சேவையாற்றிய தினகரன் வாரமஞ்சரி முன்னாள் பிரபல ஊடகவியலாளர் ஏ.பரசுராமன் விசேட விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இதன் போது அதிதிகள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன் தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து நிறுவன தலைவர் டபிள்யூ. தயாரத்ன மற்றும் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

''தினகரன் நீண்ட வரலாற்று பாரம்பரியத்தை கொண்டது. இதில் ஊழியராக பணிபுரிவதை தானும் சக ஊழியர்களும் பெருமையாக கருதுவதாக'' பிரதம ஆசிரியர் தனது வரவேற்புரையின் போது தெரிவித்தார். தமிழ் பேசும் வாசகர்களின் நலனுக்காக என்றும் செயற்படும் தினகரன் தனது பத்திரிகையினூடாக காலத்திற்கு காலம் தேவையான தகவல்களை மிகவும் பொறுப்புடன் வெளியிட்டு வருவதுடன் இந்த சேவையை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். எமது பத்திரிகையின் பிறந்நாள் விழாவொன்றின் போது மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு 'கலைக்குறிசில்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்த பெருமை தினகரனை சாரும் என்றும் அவர் நினைவூட்டினார்.

11 ஆம் பக்கம் பார்க்க













ஷம்ஸ் பாஹிம், ஸாதிக் ஷிஹான்
படங்கள்: ரஞ்சித் அசங்க, வாசித்த பட்டபெந்தி.

**தொழுகை நேரம்**
14 முதல் 18 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.03 |
| லுஹர் | 12.21 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**
சார்வரி வருடம் மாசி 20
ராகுகாலம் : பகல் : 03.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 9.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திரிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# ஆடை கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கு விசேட திட்டம்

## ஆடை தொழிற்துறை உரிமையாளர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

ஆடை கைத்தொழிற்துறை தற்போது முகங்கொடுத்துள்ள சவால்களை அடையாளம் கண்டுள்ள அரசாங்கம், அதன் உற்பத்தித் திறனையும் தரத்தையும் அதிகரிப்பதற்கு முழுமையான அனுசரணையை வழங்க தயாராக உள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதற்கு திட்டமிட்ட வகையில் நிகழ்ச்சித்திட்டமொன்றின் ஊடாக நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஒன்றிணைந்த ஆடைகள் சங்க அமைப்பின் பிரதிநிதிகளுடன் நேற்று (15) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கைத்தொழிற்துறைகளுக்கு மத்தியில் ஆடைக் கைத்தொழிற்துறை முக்கிய இடம் வகிக்கின்றது. இலங்கையை உயர் தரம் வாய்ந்த ஆடைகளுக்கான உலகளவில் போற்றப்படும் தரச்சின்னமாக மாற்றும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது. உள்நாட்டு ஆடைகள் தொழிற்துறையில் புதியதொரு எழுச்சியை ஏற்படுத்தி பாரிய அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்த இலக்கை அடைந்துகொள்வதற்காக அரசாங்கம் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருவதுடன், இதன்மூலம் இவ்வருடம் எதிர்பார்க்கப்படும் இலக்கு 5.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.



எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைந்து கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக வர்த்தகர்கள் இதன்போது ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்கள். சுகாதார நடைமுறைகள் காரணமாக இத்தொழிற்துறையின் முன்னேற்ற பயணத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்தும் வர்த்தகர்கள் தெளிவுபடுத்தினர். நாட்டின் பொதுச் சுகாதார நிலைமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஆடைக் கைத்தொழிற் துறைக்கு சில சுகாதார பரிந்துரைகளை தளர்த்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்கும் முன்மொழியப்பட்டது.

இத்தொழிற்துறையின் மனித வள பற்றாக்குறை குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், தரம் மற்றும் பாதுகாப்பான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் இத்தொழிற்துறைக்கு இளைஞர், யுவதிகளை ஈர்க்க முடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

06



## தவக்கால சிந்தனை

### 'நலம் பெற விரும்புகிறீரா?'

தவக்காலத்தின் நான்காம் வாரத்தில் பயணிக்கின்றோம்.

இன்றைய நற்செய்தி வித்தியாசமான சிந்தனைக்கு வழிவகுக்கிறது.

ஒவ்வொரு யூதரும் ஆண்டிற்கொரு முறை நடைபெறும் பாஸ்கா திருவிழா, பெந்தக்கோஸ்துத் திருவிழா, கூடாரத் திருவிழா என்று மூன்று திருவிழாக்களில் கலந்துகொள்வதற்கு எருசலேமிற்குச் செல்வதுண்டு. இயேசுவும் அப்படித்தான் திருவிழாவில் கலந்துகொள்வதற்கு எருசலேமிற்குச் செல்கிறார்.

அவர் எருசலேமிற்குச் செல்கின்றபொழுது முப்பத்தெட்டு ஆண்டுகளாய்ப் படுத்தபடுக்கையாய்க் கிடந்த ஒருவரை கண்டு, அவரிடம், "நலம் பெற விரும்புகிறீரா?" என்று கேட்கின்றார்.

அந்த மனிதர் இயேசு கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாவிட்டாலும், "தண்ணீர் கலங்கும்போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை" என்று மறைமுகமாகச் சொல்லி, "ஆம், நான் நலம்பெற விரும்புகிறேன்" என்று சொல்லாமல் சொல்கின்றார். அப்பொழுது இயேசு அவரிடம், "படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்" என்று சொல்லி அவரை நலப்படுத்துகின்றார்.இயேசு முப்பத்தெட்டு ஆண்டுகளாய்ப் படுத்தபடுக்கையாய்க் கிடந்த மனிதருக்கு நலமளிக்கின்றார்; ஆனால், அவர் விரும்பியதுபோன்று, இயேசு அவரைக் குளத்தில் இறக்கிவிட்டு நலம்பெறச் செய்யவில்லை. "படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்" என்று சொல்லியே நலமளிக்கின்றார்.

இதன்மூலம் நாம் ஒவ்வொருவரும் நலமோடு வாழவேண்டும் என்று இயேசு விரும்புகிறார் என்பது உறுதியாகின்றது. காரணம் அவர் நன்மைகளின் ஊற்றாக இருக்கின்றார். வாழ்வின் ஊற்றான இயேசு இருக்குமிடத்தில் நலம் பெருகும்தானே! நமக்கு இயேசுவிடமிருந்து நலம்பெற விருப்பம் இருக்கின்றதா?

இந்தவேத வசனங்களை இன்றைய நாளில் எமது சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்;

யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும் – (யோவா 7: 37)மெய்யாகவே அவர் பிணிகளைத் தாங்கிக் கொண்டார் (எசா 53:4)

இயேசுவுக்கு நாம் உடல் உள நோய்களிலிருந்து நலம்பெற விருப்பமிருக்கின்றது. நமக்கு அது இருக்கின்றதா?

கடவுள் நம்மோடு, நம் சார்பில் இருக்கும்பொழுது யாருக்கு நாம் அஞ்ச வேண்டும் (உரோ 8: 31)

இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன் (மத் 28; 20) என்பது இயேசு தந்த மிக உன்னதமான வாக்குறுதி.

நமது இன்பமான வேளையில் மட்டுமல்ல, துன்பமான வேளையிலும் கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்பதை உணர்ந்திருக்கின்றோமா?

'நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை' (லூக் 5: 31) என்பார் இயேசு. எனவே, நாம் நலம்பெற விரும்பும் இயேசுவிடம் நம்மையே ஒப்படைத்து இத் தவக்காலத்தில் இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

அருட்பணி பேர்னாட் ஜீவா...

புர்கா உடைக்குத் தடை;

# அமைச்சரவை பத்திரம் நேற்று சமர்ப்பிப்பு



## அமைச்சர் சரத் வீரசேக்கர

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புர்காவை தடை செய்வதற்கான உத்தரவு நேற்றைய தினம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க முகத்தை முழுமையாக மூடும் வகையிலான பெண்கள் அணியும் ஆடைகள் இதன் மூலம் தடை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தலை கவனத்திற் கொண்டே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த சில



தினங்களுக்கு முன்பு அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தில் தாம் கையொப்பமிட்டதாக தெரிவித்துள்ள அவர், புர்கா அணியும் நடைமுறை அண்மைக்காலத்தில் மத அடிப்படைவாதிகளால் ஒரு சம்பிரதாயமாக கொண்டுவரப் பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை நாட்டில் பதிவு செய்யப்படாத ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத்ரஸாக்கள் காணப்படுவதாகவும் அது தொடர்பில் எந்த கண்காணிப்புகளும் இல்லாத நிலையில் எதிர்காலத்தில் அவற்றை மூடி விடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடும் அடிப்படைவாத மதவாத கருத்துக்களை இல்லாதொழிப்பதற்கான உத்தரவை அரசாங்கம் விசேட வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்தகைய குற்றத்திற்காக கைது செய்யப்படுபவர்கள் புனர்வாழ்வளிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

மட்டு. மாத்தளை மாவட்டங்களில்

# தனிமைப்படுத்தலிலிருந்து பல பிரதேசங்கள் விடுவிப்பு

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் தனிமைப் படுத்தலுக்காக முடக்கப்பட்டிருந்த மாத்தளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல பிரதேசங்கள் நேற்றுக் காலை முதல் விடுவிக்கப் பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்தில் 162 ஏ, காத்தான்குடி 6 என்ற கிராம சேவையாளர் பிரிவு, 162 பி, காத்தான்குடி 6 மேற்கு கிராம சேவையாளர் பிரிவு, 164 காத்தான் குடி 4 ஆம்இலக்க கிராம சேவையாளர் பிரிவு, 164 பி. காத்தான்குடி 5 வடக்கு கிராம சேவையாளர் பிரிவு, 164 காத்தான்குடி இலக்கம் 5 கிராம சேவகர் பிரிவு, 164 சி, காத்தான்குடி 4 மேற்கு கிராம சேவகர் பிரிவு ஆகிய பிரிவுகளே நேற்றைய தினம் தனிமைப்படுத்தலுக்கான காண முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.



அத்துடன் 67 காத்தான் குடி முதலாம் இலக்க கிராம சேவகர் பிரிவு, 167 சி புதிய காத்தான்குடி தெற்கு கிராம சேவையாளர் பிரிவு,167 டி காத்தான்குடி மேற்கு கிராம சேவை அதிகாரி பிரிவு மற்றும் 167 ஈ காத்தான்குடி மத்திய கிராம சேவையாளர் பிரிவு ஆகியனவும் அதில் உள்ளடங்குவதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் மட்டக்களப்பு மாவட்டத்தில்

06

# அரசாங்கத்தின் சீனி வரி குறைப்பு பொதுமக்களின் நன்மைக்கே

## 145 ரூபாவிலிருந்து 105 ஆக விலைகுறைப்பே நோக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீனிக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி வரியைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முடிவு மோசடியாகக் கருத முடியாதென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



அத்தோடு இவை அனைத்தும் சீனி விலை அதிகரிப்பிலிருந்து பொது மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையே என்றும் அவர் குறிப்பிட்டார். 145 ஆக இருந்த சீனியின் விலையை 105 ரூபாயாக குறைப்பதே

06

# புதிது புதிதாக உருமாறும் கொரோனா வைரஸ்

## WHO தீவிர கண்காணிப்பு

கொரோனா வைரஸ், புதிய புதிய வகையில் தொடர்ந்து உருமாறிக்கொண்டே இருக்குமென்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

வைரஸின் புதிய உருமாற்றத்தைக் கண்காணிக்கும் நடைமுறையைப் பின்பற்றி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகளவில் வைரஸின் உருமாற்றத்தைத் தெரிந்து கொள்ள பிராந்திய அளவிலான அலுவலகங்களுடன் பணியாற்றி வருவதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரிட்டன், பிரேசில், தென் கொரியா உள்ளிட்ட சில நாடுகளில் புதிய வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தற்போதுள்ள தடுப்பூசிகள் புதிய வகை வைரஸை முறியடிக்கும் ஆற்றல் கொண்டவையா? என்பதை விஞ்ஞானிகள் மும்முரமாய் ஆராய்ந்து வருகின்றனர்.

# போலி செய்திகள் சமூகமயப்படுத்தலில் சஜித் பிரேமதாச கை தேர்ந்தவர்

## அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

போலிச் செய்திகளை சமூகமயப்படுத்துவதில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கைத்தேர்ந்தவரென அமைச்சர் சி.பீ. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மெராயா பகுதியில் நேற்று (15) நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி திருடனாக இருந்ததும் இல்லை, திருடனாக மாறப் போவதும் இல்லை. மக்கள் நம்பிக்கைக் கமைய ஜனாதிபதி ஆட்சி புரிகின்றார். அதேபோல் ரணிலும் பொய் கூறுவதில் சிறந்தவர். வாக்குகளை பெறுவதே அவர்களின் நோக்கம். வாக்குகளை பெற்ற பின்னர் அவர்கள் இந்த பகுதிக்கு வருவதில்லை.

கொழும்பிலிருந்தே அவர்கள் மக்கள் பிரச்சினையை தீர்த்தனர். யாழ்ப்பாணத்திற்கு அதிகளவு சேவைகளை செய்தவர் தற்போதைய பிரதமராவார்.

யானை, யானை என்றார்கள் அதில் எந்த

06

# ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சந்தையில் அரிசியின் விலையை குறைப்பதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து

06

புனர்வாழ்வளிப்பு வேலைத் திட்டம்;

# பூந்தோட்டம் முகாம் தயார் நிலையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள், மத அடிப்படைவாதிகளை புனர்வாழ்வு செய்வதற்கு வேலைத் திட்டம் தயார் நிலையிலுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

மதரீதியான அடிப்படைவாத செயல்களில் ஈடுபடும் நபர்கள் அங்கு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவரென

06

# இலங்கை தேசியக் கொடியுடன் நீச்சல் உடைகள் தயாரிப்பு

## நீக்குமாறு அமேசானிடம் இலங்கை கோரல்

இலங்கை தேசியக் கொடி உருவம் பொறிக்கப்பட்ட நீச்சலுடைகள், உள்ளாடைகள் மற்றும் கால்துடைப்பான்களை அமேசான் இணையத்தளத்திலிருந்து நீக்குமாறு இலங்கை கோரியுள்ளதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீனாவில் தயாரிக்கப்பட்ட கால்துடைப்பான், பாதணிகள் போன்ற பொருட்களில் இலங்கையின் தேசியக்கொடி உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அதேவேளை,

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 150.49 | 155.44 |
| கனடியன் டொலர் | 155.22 | 160.70 |
| யூரோ | 232.27 | 238.83 |
| ஜப்பான் யென் | 1.7902 | 1.8345 |
| சிங்கப்பூர் டொலர் | 144.46 | 148.79 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 271.24 | 278.53 |
| சுவிஸ் பிராங்க் | 207.89 | 215.46 |
| அமெரிக்க டொலர் | 194.42 | 198.96 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 03ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 02

## குறள் தரும் சிந்தனை



தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

*ஒப்புரவாளன் தன்னால் இயன்ற முயற்சி செய்து சேர்த்த பொருள் எல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும்.*

## மூன்றாவது அலை உருவாக இடமளித்தால் ஆபத்து!

கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தலில் இருந்து உலகில் எந்த நாடுமே இன்னும் மீட்சி பெறாத சூழலில், அத்தொற்று தோற்றம் பெற்ற முதல் வருடத்திலேயே சுமார் நான்கு திரிபுகளை அடைந்துள்ளது. அவற்றில் கடந்த வருட இறுதியில் பிரித்தானியாவிலும், தென்னாபிரிக்காவிலும் ஏக காலப் பகுதியில் கண்டறியப்பட்ட திரிபுகள் மிகவும் தீவிரமாகப் பரவக் கூடியவையாகும்.

இவ்விரு திரிபுகளுக்கும் இடையில் வித்தியாசங்கள் உள்ளன. அதாவது பிரித்தானியாவில் இனம் காணப்பட்ட திரிபடைந்த வைரஸ், கொவிட் 19 தொற்றை விடவும் 75 வீதம் வேகமாகப் பரவக் கூடியதாகும். இத்திரிபு கட்டறிந்து அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உலகின் பெரும்பாலான நாடுகள் பிரித்தானியாவுடனான விமானப் போக்குவரத்து சேவையை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தின. அவற்றில் இலங்கையும் ஒன்றாகும்.

அத்தோடு பிரித்தானியாவும் திரிபடைந்த வைரஸின் பரவுதலைக் கட்டுப்படுத்தவென முடக்கநிலை அடங்கலான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைக்கு கொண்டு வந்தது.

இவ்வாறான நிலையில் பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்ட இத்தொற்றின் திரிபடைந்த வைரஸ் அவிசாவளை, பியகம, கொழும்பு, வவுனியா ஆகிய பிரதேசங்களில் அண்மையில் பதிவாகியது. அதாவது இத்திரிபடைந்த வைரஸ் வேறு நாடுகளின் ஊடாகவே இலங்கைக்குள் வந்து சேர்ந்துள்ளது. அதன் விளைவாக பிரித்தானியாவுடனான விமான சேவையை இலங்கை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது.

இதேவேளை தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட கொவிட்19 தொற்றின் திரிபடைந்த வைரஸ் இந்நாட்டில் கடந்த வாரம் பதிவாகியுள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொற்று நோய்கள் தொடர்பான ஆய்வாளர்கள் இதனை உறுதிபடுத்தியுள்ளனர். தன்சானியாவிலிருந்து நாடு திரும்பிய ஒருவரே இத்தொற்றுக்கு உள்ளானவராக அடையாளம் காணப்பட்டிருக்கின்றார். இது மருத்துவத் துறையின் பல்வேறு மட்டங்களதும் அவதானத்தைப் பெற்று இருக்கின்றது.

இந்நாட்டில் கொவிட்19 தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் கொவிட்19 தடுப்பூசி வழங்கல் நடவடிக்கை என்பவற்றின் பயனாக இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் தற்போது வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் கவனயீனமும் அசிரத்தையும் மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருக்கின்றன.

இவ்வாறான நிலையில் இத்தொற்றின் மூன்றாவது அலை தோற்றம் பெறுவதற்கான அச்சுறுத்தல் நிலவுவதாக மருத்துவத் துறையினர் அச்சம் தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாக 'தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட கொவிட்19 தொற்றின் திரிபடைந்த வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்தவென விஷேட கவனம் செலுத்தப்படுவது மிகவும் அவசியம். தவறும் பட்சத்தில் அவசர சிகிச்சைக்கான தேவை பெரிதும் அதிகரிப்பதோடு உயிரிழப்போரின் எண்ணிக்கையும் தற்போதைய நிலையை விடவும் அதிகரித்து விட முடியும்' என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்திருக்கின்றது.

அதேநேரம் அச்சங்கத்தின் தலைவரான நரம்பியல் மருத்துவ நிபுணர் டொக்டர் பத்மா குணரட்ன, 'தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட திரிபடைந்த கொவிட்19 வைரஸ் இந்நாட்டில் பரவும் நிலை ஏற்படுமாயின் அதனைக் கட்டுப்படுத்தவென பெரும் சவாலுக்கு முகம் கொடுக்க நேரிடும். அதிலும் இத்தொற்றுக்கு ஏற்கனவே உள்ளானவர்களுக்கும் இத்தொற்று ஏற்படலாம். இத்தொற்று தவிர்ப்புக்காகப் பெற்றுக் கொள்ளப்படும் தடுப்பூசியும் உரிய பாதுகாப்பை அளிக்காது. அத்தோடு இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்கு ஏற்கனவே கொவிட்19 தொற்றுக்கு உள்ளானவர்களின் குருதியை சிகிச்சைக்காக வழங்க முடியாத நிலையும் ஏற்படலாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள திரிபடைந்த கொவிட்19 வைரஸ் மிகவும் பயங்கரமானது என்பது தெளிவாகின்றது.

அதன் காரணத்தினால் இந்நாட்டில் தற்போது இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், கொவிட்19 தவிர்ப்புக்கான தடுப்பூசி வழங்கப்படுகின்ற வேளையிலும் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் கவனயீனமாகவோ அசிரத்தையாகவோ நடந்து கொள்ளக் கூடாது.

கொவிட்19 தொற்று மாத்திரமல்லாமல் பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்ட அதன் திரிபடைந்த வைரஸும், தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட திரிபடைந்த வைரஸும் இந்நாட்டிலும் பதிவாகி இருக்கின்றன.

ஆகவே இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களாக விளங்கும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களை உச்சளவில் கடைப்பிடித்து ஒழுகுவதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அதனைத் தமது கடமையாகவும் பொறுப்பாகவும் கருதும் போது இத்தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

editor.tkn@lakehouse.lk

# சமூக சீர்கேடுகளின் கூடாரமாக மாறிய மருதமுனை 65 மீற்றர் வீட்டுத் திட்டம்!

கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கிராமமே மருதமுனை ஆகும். இக்கிராமத்தில் சுனாமி அனர்த்தத்தில் 922 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 286 ஆண்களும், 636 பெண்களும் அடங்குகின்றனர். மொத்த உயிரிழப்பில் 68.9 வீதத்தினர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அனர்த்தத்தில் 351பேர் காயமடைந்தனர். மேலும் 48 பெண்கள் விதவைகளானார்கள், 18 சிறுவர்கள் ஆதரவற்றவர்களானார்கள். மருதமுனையில் வாழ்ந்து வந்த 4739 குடும்பங்களில் 2996 குடும்பங்கள் இந்த சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டன.

### சுனாமியில் பாதிப்புற்றோருக்கென அமைக்கப்பட்ட வீடுகள் அழிவுறும் நிலையில்!

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு காணிகளைத் தேட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மருதமுனை பிரதேசத்தில் காணிகள் இல்லை.





இதனால் மருதமுனையின் மேற்குப் புறத்தில் இருந்த வயல் நிலங்களையே நாட வேண்டியிருந்தது. அப்போது கல்முனை பிரதேச செயலாளராக இருந்த மருதமுனையைச் சேர்ந்த ஏ.எச்.எம்.அன்சார் (தற்போது கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்) அவர்களின் அயராத முயற்சியினால் மருதமுனையின் மீள்எழுச்சி முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையில் அவரது பதிவிக் காலத்தில் மருதமுனை மேட்டுவட்டை விவசாய நிலம் 33 ஏக்கர் சுவீகரிக்கப்பட்டது. அந்தக் காணியில் 10 ஏக்கரில் 65 மீற்றர் வீட்டுத் திட்டம் என்ற பெயரில் அரச நிதியில் 186 வீடுகள் நிர்மாணிக்கத் திட்டமிட்டு 178 வீடுகள் அமைக்கப்பட்டன. இந்த வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கு பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்சார் தனது காத்திரமான பங்களிப்பைச் செய்திருந்தார்.

அவர் இடமாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் புதிதாகப் பதவியேற்ற பிரதேச செயலாளர் எம்.எம்.நௌபல் இந்த விடயத்தில் பணியைத் தொடர்ந்தார். அப்போது சுனாமியால் பாதிக்கப்பட்டிருந்தவர்களாக இனங்காணப்பட்ட 109 பேருக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வீடுகள் வழங்கப்பட்டன. எஞ்சிய 69 வீடுகள் வீடற்ற வறிய குடும்பங்களுக்கு வழங்கவென மாவட்டச் செயலாளரால் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையில் இதுவரை அந்த வீடுகள் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை.

### கவனிப்பாரற்ற வீடுகளுக்குள் மாலை முதல் நள்ளிரவு வரை சமூகவிரோத செயல்கள்

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 16 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில் 65 மீற்றர் வீட்டுத் திட்டத்தில் எஞ்சிய வீடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. இந்த வீடுகள் தற்போது அழிந்த நிலையில் போதை தரும் பொருட்களுக்கு அடிமையானோரின் வாழ்விடமாகவும், சமூகவிரோத செயற்பாட்டாளர்களின் தங்குமிடமாகவும் மாறியுள்ளன. அங்கு விபசாரமும் இடம்பெறுவதாக மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

அவ்வீடுகளில் அதிகமானவை சுவர்கள் மட்டும் எஞ்சிய நிலைக்கு வந்துள்ளன. படிப்படியாக ஓடுகள் கழற்றப்பட்டு, சுவர்களின் கற்களையும் பெயர்த்தெடுத்துச் செல்லும் நிலைமை உருவாகியுள்ளது.

அவ்வப்போது கடமையேற்ற அம்பாறை மாவட்டச் செயலாளர்கள் இந்த வீட்டுத் திட்டத்தில் எஞ்சியிருக்கின்ற வீடுகளை மக்களுக்குக் கையளிப்பதில் அக்கறை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதனால் இந்த வீடுகள் அழிவு நிலைக்கு வந்து சமூகவிரோத செயற்பாட்டாளர்களின் தளமாக மாறி விட்டது.

இந்த வீட்டுத் திட்டத்தில் தினமும் மாலை தொடக்கம் நள்ளிரவு வரை இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக கூடி நிற்கின்றனர். மது, கஞ்சா,ஏனைய போதை தரும் பொருட்கள் தாராளமாக அங்கே பயன்படுத்தப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பில் கல்முனைப் பொலிஸார் அடிக்கடி சுற்றிவளைப்புக்களை நடத்துகின்றனர். இந்த சுற்றிவளைப்பில் அண்மையில் பல இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் சுற்றிவளைப்புகளை நடத்துகின்ற போதிலும், அவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுச் செல்வதைப் போன்று இளைஞர் செயற்படுகின்றனர். இந்த நிலையில் இந்த வீட்டுத் திட்டம் பாழடைவதோடு பல இளைஞர்களின் வாழ்க்கையும் பாழடைந்து கொண்டிருக்கின்றது. எனவே இந்த வீடுகளை உடனடியாக மக்களுக்கு வழங்குவதன் மூலமே சமூகசீர்கேடான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல் தலைமைகள் இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் அக்கறையற்றிருந்தமைதான் இன்றைய பிரச்சினைக்கான காரணம் ஆகும். காலத்துக் காலம் தேர்தல் வருகின்ற போது மக்களின் காலடிக்கு வருகின்ற அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்கி விட்டுச் செல்கின்றனர். ஆனால் தேர்தல் முடிந்ததும் அவர்கள் மக்களிடம் வருவதில்லையென்று மருதமுனை மக்கள் கூறுகின்றனர். இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்டோர் அக்கறை காட்டி, மருதமுனை பிரதேசத்தில் வீடற்றிருக்கின்ற வறிய மக்களை இனங்கண்டு இந்த வீடுகளை கையளிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும்.



பி.எம்.எம்.ஏ.காதர்
(மருதமுனை தினகரன் நிருபர்)

# பேரறிவாளன் உட்பட ஏழு தமிழர்களும் விடுதலை; கச்சதீவை மீட்க நடவடிக்கை

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான அ.தி.மு.க தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி தி.மு.க மற்றும் கூட்டணிக் கட்சிகள் தொகுதி பங்கீடு செய்து வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டு விட்டனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தி.மு.க தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்த அறிக்கைக்கு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், சத்துணவு அமைப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அ.தி.மு.க சார்பில் பல்வேறு குழப்பங்களுக்கு இடையில் கூட்டணி கட்சிகளுக்கு தொகுதி பங்கீடு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அ.தி.மு.க தேர்தல் அறிக்கை எப்போது வெளியிடப்படும் என்று எதிர்பார்ப்பு எழுந்த நிலையில், அ.தி.மு.க சார்பில் தேர்தல் அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், துணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தேர்தல் அறிக்கையை கூட்டாக வெளியிட்டனர்.



## தேர்தலுக்காக நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை அள்ளி வீசும் அ.தி.மு.க

அதன் விபரம் வருமாறு:

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1500, ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்கள் இலவசம் உள்ளிட்ட வாக்குறுதிகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது முழு தேர்தல் அறிக்கை வெளியிடப்படுகிறது.

வீடுகள் தோறும் 'அம்மா வோஷிங் மெஷின்' வழங்கப்படு ம். அம்மா இல்லம் திட்டம் மூலம் அனைவருக்கும் வீடு கட்டித் தரப்படும். அ.தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும். ஆட்சிக்கு மீண்டும் வந்தவுடன் கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை கொடுக்கப்படும். காயிதேமில்லத் பெயரில் இஸ்லாமிய பல்கலைக்கழகம் அமைக்கப்படும். மெட்ராஸ் உயர்நீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்றமாக மாற்றப்படும்.

சென்னையில் உச்சநீதிமன்ற கிளையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குடியிருப்பதற்கு சொந்த வீடு இல்லாதவர்களுக்கு கிராமப்புறங்களில் அரசே இடம் வாங்கி கொன்கிரீட் வீடுகள் கட்டித் தரும்.நகர்ப்புறங்களில் வீடு இல்லாத மக்களுக்கு அரசே நிலம் வாங்கி அடுக்குமாடி குடியிருப்புகள் விலையில்லாமல் வழங்கப்படும்.

குல விளக்கு திட்டம் மூலம் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 1,500 ரூபா குடும்பத் தலைவிகளுக்கு அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். பெண்கள் இல்லாத வீடுகளில் ஆண்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

தமிழர் பண்டிகையான பொங்கலுக்கு வழங்கப்படும் 2,500 ரூபா பொங்கல் பரிசு இனி ஆண்டுதோறும் வழங்கப்படும். நகரப்பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிருக்கு, 50 வீதம் கட்டணச் சலுகை வழங்கப்படும்.

பொதுவிநியோக திட்டத்தின் கீழ், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசிய ரேஷன் பொருட்கள் வீடுகளுக்கே நேரடியாக வழங்கப்படும். அனைத்து குடும்பத்திற்கு வருடத்திற்கு 6 இலவச காஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும். அனைத்து ரேஷன் அட்டைதாரகளுக்கும் சோலார் சமையல் அடுப்பு, அம்மா வோசிங் மெஷின் விலையில்லாமல் வழங்கப்படும்.

விவசா யிகளை ஊக்குவிக்கவும், விவ சாய உற்பத்தியை அதிகரிக்கவும் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 7,500 ரூபா உழவு மானியம் வழங்கப்படும்.

மகளிர் சுய உதவிக்குழுக் கடன், நகைக்கடன் தள்ளுபடியைத் தொடர்ந்து, மாணவர் நலன் காக்க மாணவர்களின் கல்விக் கடன் ரத்து செய்யப்படும்.

தற்போது மாணவர்களின் நலனுக்காக நாளொன்றுக்கு வழங்கப்படும் 2GB இலவச டேட்டா, இனி வருடம் முழுவதும் வழங்கப்படும்.வீட்டில் ஒருவருக்கு அரசுப்பணி உறுதியாக வழங்கப்படும். சமூக ஓய்வூதிய திட்டம் மூலம் ஆண் வாரிசுகளால் புறக்கணிக்கப்பட்ட முதியோர்கள், விதவைப் பெண்கள், முதிர் கன்னிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மூன்றாம் பாலினத்தவரின் சமூக பாதுகாப்பிற்கு வழங்கப்படும் 1,000 ரூபா உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தி 2,000 ரூபாவாக வழங்கப்படும்.

திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், ஏழைத் தம்பதிகளுக்கு அழகிய பட்டாடை, வெள்ளிக் கொலுசு, வீட்டு உபயோகப் பொருட்கள் உட்பட திருமண தம்பதிகளுக்கு அம்மா சீர்வரிசை வழங்கப்படும். அனைவருக்கும் இலவச அரசு கேபிள் டி.வி இணைப்பு வழங்கப்படும்.

9,10,11,12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் இனி செயல்படுத்தப்படும். தனியார் பங்களிப்புடன் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு, செயல்பட்டு வரும் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் விரிவுப்படுத்தி செயற்படுத்தப்படும்.

அங்கன்வாடி, தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என அனைத்து மாணாக்கர்களுக்கும் தினமும் பால் பவுடர் வழங்கப்படும். ஏழை, எளிய மக்கள் அதிக வட்டியில், தனியாரிடம் கடன் வாங்கி சிரமப்படுவதை தவிர்க்க, சுலபத் தவணையில் திருப்பி செலுத்தும் வகையில், வட்டியில்லா கடனுதவி அம்மா பேங்கிங் கார்ட் மூலம் வழங்கப்படும். இது வங்கியுடன் இணைக்கப்படும்.

இவை உள்ளிட்ட பல்வேறு அறிக்கையை முன்னாள் அமைச்சர் சி. பொன்னையன் வாசித்தார்.

திருச்சி
எம்.கே.ஷாகுல் ஹமீது

# வீதியோரம் அமர்ந்து உணவு உண்ண வேண்டிய அவலம்!

## கழிப்பறை வசதிகளும் கிடையாது; தோட்டங்களில் தொழில் புரியும் பெண் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மீறல்

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் தொழில் செய்யும் பெண் தொழிலாளர்களுக்கு நீர்வசதியுடன் கூடிய உணவு உண்ணும் இடம், கழிப்பறை அமைக்கப்படுவது அவர்களது அடிப்படை உரிமையாகும். செங்கொடி பெண்கள் இயக்கம் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களுக்கு இவ்வாறான இடங்களை அமைக்குமாறு அழுத்தம் கொடுக்கும் செயற்பாடுகளை அனைத்து பிரதேசங்களிலும் முன்னெடுத்து வருகின்றது.

அது தொடர்பாக செங்கொடி பெண்கள் இயக்க செயற்பாட்டளர் ஆனந்தி சிவசுப்பிரமணியம் கருத்துத் தெரிவிக்கையில், பெருந்தோட்டத் துறையில் பெண் தொழிலாளர்கள் காலாகாலமாக முகம் கொடுத்து வந்த பிரதான பிரச்சினை இன்றுவரையில் தீர்க்கப்படாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பெண் தொழிலாளர்கள் தங்களது வேலைத்தலத்தில் தண்ணீர் வசதியுடன் கூடிய சாப்பாட்டிடங்கள் இல்லாத காரணத்தால் பாதை ஓரங்களிலும், கற்பாறைகளிலும், மரங்களுக்கு அடியிலும் அமர்ந்து உண்ணுகின்றார்கள். எங்கள் சமூகத்தில் எங்களோடு வாழும் தொழிலாளர்கள் இவ்வாறு தங்களுடைய உணவை உண்ணுவதை பார்க்கும் போது நாங்கள் அந்த அநீதியைக் கண்டு கொதித்து எழ வேண்டும். ஆனால் நாங்கள் அதனை சாதாரணமாக கடந்து போகின்றோம். இந்நிலையை எண்ணி ஒரு சமூகமாக நாங்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தூசு, வாகனப் புகை என்பவற்றை சுவாசித்துக் கொண்டு அவை உணவில் கலந்திருப்பதை அறிந்தும், அறியாமலும் இப் பெண்கள் உண்ணுகின்றார்கள். பாதைகளில் பலர் பார்த்து செல்லும் காட்சிப் பொருளாக அமர்ந்தபடி அவர்கள் சாப்பிடுகின்றார்கள். ஒரு நாள் இரண்டு நாள் இவ்வாறு உண்பதை ஏற்கலாம். ஆனால் காலகாலமாக அவர்கள் இவ்வாறு நடத்தப்படுதை ஒருநாளும் ஏற்றுக் கொள்ள முடியாது.

சிந்தித்துப் பாருங்கள். கொட்டும் மழையில் நின்று கொண்டு ஒதுங்குமிடம் எதுவுமின்றி ஒருவரால் உண்ண முடியுமா? ஆனால் இப்பெண் தொழிலாளர்கள் அவ்வாறு உண்ணுகின்றார்கள். இல்லையென்றால் சாப்பிடாமல் வேலை செய்து முடித்து விட்டு வீட்டுக்கு வருகின்றார்கள். இல்லையென்றால் நாய்கள், குரங்குகள், காகங்கள் என மிருகங்கள், பறவைகள் உட்பட பிராணிகள் சாப்பாட்டை நாசம் செய்து விட்டு சென்று விடுகின்றன. அதன் போது சாப்பிடாமல் பட்டினியாக இருந்து இப்பெண் தொழிலாளர்கள் வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

மேலும் கைகளை கழுவுவதற்கு தண்ணீர் வசதிகள் எந்த மலையிலும் ஏற்படுத்தப் படவில்லை. குடிப்பதற்கும், கைகளை கழுவுவதற்கும் தொழிலாளர்கள் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு அவர்கள் கொண்டு செல்லும் தண்ணீர் 8 மணி நேரத்துக்கு போதுமானதாக இல்லை. அவசரத்திற்கு குடிப்பதற்கு தண்ணீர் தேவைப்பட்டாலும் அந்த வசதிகள் ஏற்படுத்தப்படாத வேலைத்தலமாக தேயிலை இறப்பர் மலைகள் காணப்படுகின்றன.



அடிப்படை அத்தியாவசிய தேவையின் ஒன்றான மலசலகூடங்களும் இத்தொழிலாளர்களுக்கு வேலைத்தலத்தில் இல்லை என்பது மேலும் ஒரு பாரிய பிரச்சினையாகும், மலசலகூடம் என்பது மிகவும் அத்தியாவசியமாகும். 8 மணி நேரம் வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கு நீர் வசதியுடன் கூடிய மலசல கூடங்கள் இல்லை என்பதும், அவர்கள் இயற்கைக் கடன்கள் நிறைவேற்ற மரங்களின் மறைவுகளையும், புதர்களையும் தேடிச் செல்வதும். அவ்வாறான மறைவான இடங்களில் பூச்சிகள் தாக்குவதும், வழுக்கி விழுந்து உபாதைகளுக்கு உள்ளாவதும் பரிதாபக் காட்சிகளாகும்.

மாதவிலக்கு காலங்களில் தங்களுடைய உடைகளை மாற்றிக் கொள்ளவோ, அதற்கான தேவைகளை செய்து கொள்ளவோ அப்பெண்களுக்கு வாய்ப்பில்லை. மேலும் கர்ப்பிணிப் பெண்கள் மிகுந்த சுகாதரா கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.



யாரும் பார்த்து விடுவார்களோ என கூச்சத்துக்கு உள்ளாகி, பயந்து, மனஉளைச்சலுக்கு உள்ளாகி தொழிலாளர்கள் தங்களது உடல் கழிவுகளை வெளியேற்றுவது என்பது வேலைத்தல உடல் நல பாதுகாப்பு மற்றும் தொழில் உரிமை மீறலாகும்.

இவ்வாறான உரிமை மீறல்களை தினம் தினம் எம் கண்முன்னே கண்ட போதும் சம்பந்தப்பட்டோர் தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, இப்பிரச்சினைகளை கண்டும் காணாதது போல் செயற்படுவது தொழிலாளர் வர்க்கத்திற்கே இழைக்கப்படும் அநீதியாகும். மேலும் இந்நிலையானது இலங்கையின் தொழில் சட்டங்களின் தரம் தொடர்பாக கேள்வி எழுப்புகின்றது.

அதே போன்று தொழிற்சங்கங்கள் அனைத்தும் தங்களது கட்சி, அரசியல் பேதங்களை மறந்து தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க ஒன்றுபட வேண்டும். பெண் தொழிலாளர்களின் இப்பிரச்சினையானது பொதுப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அனைத்து தொழிற்சங்கங்களும் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் இப்பிரச்சினை காரணமாக தினம் தினம் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கும் பெண் தொழிலாளர்கள் இதன் தாக்கத்தை வெளிப்படையாக கலந்துரையாட ஆரம்பிக்க வேண்டும். தோட்ட மட்டத்தில் ஏனைய தொழிலாளர்களக்கு இப்பிரச்சினையின் விளைவுகளை தெளிவுபடுத்துவதோடு, கம்பனிகள் மற்றும் அரசு மட்டத்தில் இப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான அழுத்தத்தை உருவாக்க வேண்டும்.

செங்கொடி பெண்கள் இயக்கம் இத்தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் இந்த அநீதியை தடுத்து நிறுத்துவதற்கு தொழிலாளர்களுக்கு அறிவூட்டும் வகையிலும், அரசு மற்றும் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் சுவரோவியங்களை தீட்ட ஆரம்பித்துள்ளது.

இச் செயற்பாடானது அனைத்து தரப்பினரையும் இவ்விடயம் தொடர்பாக கவனிக்கச் செய்யும் என எதிர்பார்க்கின்றோம். அதே சந்தர்ப்பத்தில் அரசு கம்பனிகளுக்கு இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

*(Ceylon workers Red Flag Union & Red Flag Women's Movement)*

# அம்பாறை மாவட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

அம்பாறை மாவட்டத்தில் கொரோனா காலத்தில் பாதிப்புற்றிருந்த பெண்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டன. குடும்ப சிக்கல்களால் பாதிக்கப்பட்டு, தங்களின் வாழ்க்கையை முன்கொண்டு செல்ல முடியாமல் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்புற்ற நிலையில் அடையாளம் காணப்பட்ட, அம்பாறை மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக மனித எழுச்சி நிறுவனத்தின் (எச்.ஈ.ஓ) ஏற்பாட்டில் பத்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுகள் மற்றும் சுகாதார சுத்தப்படுத்தல் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பொத்துவில், இறக்காமம், சம்மாந்துறை போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த இருநூறு குடும்பங்களுக்கான இரண்டு மில்லியன் ரூபா நிதி உதவித் தொகையை நீலன் திருச்செல்வம் ட்ரஸ்ட் வழங்கியிருந்தது.






மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட இருநூறு குடும்பங்களுக்கான பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அந்தந்த பிரதேச செயலகங்களில் நடைபெற்றது.

மனித எழுச்சி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம்.அப்துல் லத்தீப், பொத்துவில் பிரதேச செயலாளர் வை.றாசித், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, இறக்காம பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மனித எழுச்சி நிறுவனத்தின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் மனித எழுச்சி நிறுவனமானது இவ்வாறு மிகுந்த பாதிப்புக்களுக்கு உள்ளான பெண்கள் தலைமை தாங்கும் ஐநூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு கடந்த மூன்று வருட காலமாக ஆதரவாய் இருந்து பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐ.ஏ.ஸிறாஜ்...
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# 33 வருட சேவையில் இருந்து ஓய்வு பெறும் பெரியநீலாவணை அக்பர் வித்தியாலய அதிபர்

பெரியநீலாவணை அக்பர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய அபூபக்கர் முஹம்மது ஜிப்ரி தனது 33 வருட கல்விச் சேவையிலிருந்து இன்று ஓய்வு பெறுகின்றார்.

1988.08.07 ஆம் திகதி ஆசிரியர் பணியில் இணைந்து கொண்ட இவர், தனது முதல் நியமனத்தை பெரியநீலாவணை புலவர் மணி ஷரிபுத்தீன் மகாவித்தியாலயத்தில் பெற்று, கல்விப் புலத்தில் பின்தங்கிய அப்பிரதேச மாணவர்களின் கல்வி சிறப்புற அரும்பணியாற்றி நல்லதொரு ஆசிரியராக கல்விச் சமூகத்தால் பாராட்டப்பட்டார்.

அதன் பின்னர் கல்முனைக்குடி அல்அஸ்ஹர் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு பாடுபட்டார். நற்பிட்டிமுனை அல்அக்ஸா மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கும் மாணவர்களுக்கு சிறப்பான கல்விப் பணியாற்றினார்.

மீண்டும் ஆரம்பப் பாடசாலையான பெரியநீலாவணை புலவர் மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து பணி புரிந்தார். மாணவர்களின் கல்வி, மாணவர்களின் புறகிருத்திய செயற்பாடுகளுக்கான உதவினார். பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகள் என எல்லாவற்றிலும் தன்னை



முழுமையாக ஈடுபடுத்தி கல்விச் சமூகத்தால் பாராட்டப்பட்டார்.

புலவர் மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் இருந்து மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கும் கல்வியால், பண்பால் அதிக மாணவர்களையும், ஆசிரியர் குழாமையும் கவர்ந்து பண்பான ஆசிரியர் என்ற நாமத்தை தனதாக்கிக் கொண்டார்.

இவரின் சிறப்பான ஆசிரியர் பணியைக் கண்ட பெரியநீலாவணை அக்பர் கல்விச் சமூகம் இவரை அணுகி அக்பர் கிராமத்தில் அமையவிருக்கும் அக்பர் வித்தியாலயத்துக்கு அதிபராக அவரை நியமிக்க முடிவு செய்ததை எடுத்துக் கூறிய போது அதை தட்டிக் கழிக்காமல் ஏற்றுக் கொண்டார். அங்கு அதிபர் நியமனத்தை பெற்று அப்பிரதேச மாணவர்களின் கல்வித் தேவையை காலடிக்கு கொண்டு வந்து அரும் கல்விப்பணி செய்தார்.

ஆரம்பத்தில் முதலாம் தரத்தை வைத்து தொடங்கப்பட்ட இப்பாடசாலையில் இன்று தரம் ஒன்பது வகுப்பு வரை கல்வி நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்றால் அதில் அதிபர் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது.

இவரின் 33வருட கல்விச் சேவையை பாராட்டி இன்று (2021/03/16) சேவை நலன் பாராட்டு விழாவினை பாடசாலைச் சமூகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வு தற்போதைய இப்பாடசாலையின் அதிபர் எம்.சி.எம்.மபாஸ் தலைமையில் நடைபெறுகின்றது.

றாசிக் நபாயிஸ்...
(மருதமுனை)

## ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது ஆண்டு நிறைவு




ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது ஆண்டு நிறைவு விழா ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்றது. கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கட்சி முக்கியஸ்தர்களை படத்தில் காணலாம்.

(படம்: சுலோசன கமகே)

### 'பாரம்பரியம்' நிகழ்ச்சியில்

## மர்ஹூம் சைபுதீன் சாஹிபின் வானொலி பங்களிப்புகள்



இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் இன்று (16) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், மர்ஹூம் மௌலவி ஆர்.என். சைபுதீன் சாஹிபின் வானொலி பங்களிப்புகள் நினைவுகூரப்படவிருக்கிறன.

கடந்த காலங்களில் முஸ்லிம் சேவைக்கு இவர் வழங்கிய பங்களிப்புகள் அளப்பரியன.

தன் கம்பீரக் குரலால் ஆத்மார்த்தமாக ஆன்மீக நிகழ்ச்சிகள் பல வழங்கி ஆயிரகணக்கான நேயர்நெஞ்சங்களில் இடம் பிடித்துக்கொண்ட இவர், "தீன்ஷா" எனும் பெயரில் நூற்றுக்கணக்கான நாடகங்கள் எழுதியதன் மூலம் தமிழ் பேசும் அனைத்து இனத்தவரின் மத்தியிலும் பெரும் புகழைத்தேடிக் கொண்டவராவார்.

அன்னாரின் நினைவுகளை அவரது புதல்வர் மௌலவி ரிப்கி (அல் அருஷி), சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி ஆகியோர் மீட்டுகின்றனர். இவர்களை கலாபூஷணம் எம்.எஸ். எம். ஜின்னா நேர்காணல் செய்ய நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப்பொறுப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினோஷியா தயாரித்தளிக்கிறார்.

## இலங்கை தேசியக்... (03 ஆம் பக்கத் தொடர்)

சீனாவில் தயாரிக்கப்பட்ட நீச்சலுடைகள், உள்ளாடைகளிலும் இலங்கையின் தேசியக் கொடி பொறிக்கப்பட்டுள்ளது. இந்த ஆடைகளும் அமேசான் இணையத்தளத்தில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. இந்நிலையில், இலங்கையின் தேசிய கொடி உருவம் பொறிக்கப்பட்ட இத்தகைய பொருட்கள் தொடர்பில் அமேசான் நிறுவனத்திடம் இலங்கை தனது ஆட்சேபனையை தெரிவித்ததுடன், இத்தகைய பொருட்கள் எதிர்காலத்தில் தயாரிக்காதிருக்க உறுதியளிக்குமாறு சீன அதிகாரிகளிடம் இலங்கை கோரியுள்ளது. சீனாவிலுள்ள இலங்கைத் தூதுரகம் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், 'இலங்கை தேசியக் கொடியை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட கால்துடைப்பான்கள் அல்லது அது போன்ற பொருட்களை விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்துமாறு அமேசான் நிறுவனத்திடம் இலங்கைத் தூதரகம் கடிதம் மூலம் கோரியுள்ளது' என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திச் சேவையொன்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, அமெரிக்காவின் வொஷிங்டன் நகரிலுள்ள இலங்கைத் தூதரகமும் இவ்விடயம் தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. எனினும் ,அமேசான் இணையத்தளத்தில் சீன வர்த்தகர்கள் சிலரால் இலங்கைக் கொடி உருவம் பொறிக்கப்பட்ட நீச்சலுடை, உள்ளாடை போன்றவை விற்பனைக்கு விடப்பட்டுள்ளன என அந்த செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்த ஆடைகளுக்கு 9.20 டொலர் முதல் 17.30 டொலர்கள் வரை விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

## தனிமைப்படுத்தலிலிருந்து ... (03 ஆம் பக்கத் தொடர்)

காத்தான்குடி 166ஏ,கிராம சேவகர் பிரிவு,மோதினார் வடக்கு,சின்னதோன வீதி, கபூர் பிரதேசம், டெலிகொம் வீதி, முதலாம்குறுக்குத் தெரு மற்றும் பௌசி மாவத்தை ஆகிய பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேபோன்று மாத்தளை மாவட்டத்தில் இஸ்மான் மாவத்தை, மீதெனிய கிராமசேவையாளர் பிரிவுதனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## அரசாங்கத்தின்... (03 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கத்தின் நோக்கமென குறிப்பிட்ட செஹான் சேமசிங்க, சீனியின் விலை குறைக்கப்பட்டிருக்காவிட்டால் விலை 200 ஆக உயர்ந்திருக்குமென கூறினார். அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் அரசியல் மோசடிகளுக்கும் வித்தியாசம் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனி வரி மோசடியினால் நாட்டுக்கு 15.6 பில்லியன் ரூபாய் வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக இறைவரி திணைக்களம் அண்மையில் பாராளுமன்றத்தில் அரச நிதி தெரிவுக்குழுவுக்கு வழங்கிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

## ஒரு இலட்சம்.. (03 ஆம் பக்கத் தொடர்)

அரிசியை இறக்குமதி செய்ய தயாராக உள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு மற்றும் அரிசியின் விலை அதிகரித்து வருகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரிசி ஒரு கிலோவின் விலையை 100 ரூபாவுக்குக் குறைவாக தக்க வைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## போலி... (03 ஆம் பக்கத் தொடர்)

புண்ணியமும் இல்லை. தற்போது தொலைப்பேசி அதிலும் புண்ணியமில்லை. தற்போது தொலைப்பேசியில் மின் சேமிப்பு இல்லை. அது செயலிழந்துள்ளது.

இப்போது அது வேலை செய்வதில்லை. நாம் மக்களின் பொறுப்பை ஏற்றது போல் செயற்படுகின்றோம். ஆகவே இரண்டு கால் யானையையும் நாம் விரட்டியுள்ளோம். யானை வேலிகளை அமைக்கவுள்ளோம். அதனை எடுத்த எடுப்பில் செய்ய முடியாது. எமது ஆட்சியில் யானை – மனித மோதலுக்கு தீர்வு வழங்கப்படும்" என்றார்.

## பூந்தோட்டம் முகாம்... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ள அவர், வவுனியா பூந்தோட்ட பகுதியிலுள்ள புனர்வாழ்வு மத்திய நிலையம் அதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் மதரீதியான அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை புனர்வாழ்வு செய்வதற்காக புதிய கட்டளைகள் உள்ளடங்கிய வர்த்தமானி அண்மையில் வெளியிடப்பட்டது. அதற்கிணங்க கடுமையான மத அடிப்படைவாத சிந்தனைகளை உடையவர்கள் பாதுகாப்பு பிரிவினரிடம் சரணடைந்தாலும் அல்லது கைது செய்யப்பட்டாலும் அந்த நபர்கள் ஒரு வருடத்திற்கு குறைவில்லாத காலத்திற்கு மேற்படி மத்திய நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## ஆடை கைத்தொழிற்துறை... (03 ஆம் பக்கத் தொடர்)

முதலீட்டாளர்களின் வீசா கால எல்லையை நீடித்தல், வீசா வழங்கும்போது நெகிழ்ச்சியான கொள்கை ஒன்றை பின்பற்றுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, நிமால் சிறிபால த சில்வா, பவித்ரா வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்ணாண்டோபுள்ளே, சன்ன ஜயசுமன, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டப்ளியு.டி.லக்ஷ்மன், இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் சஞ்சய மொஹட்டால ஆகியோரும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள், அரசாங்க அதிகாரிகள், இணைந்த ஆடை கைத்தொழிற்துறை சங்க அமைப்பின் தலைவர் அஷ்ரப் ஒமர் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## கிரேண்ட்பாஸில் பாரிய தீ விபத்து...

இவ் அனர்த்தத்தில் எவருக்கும் உயிர் சேதங்களோ எவ்வித காயங்களோ ஏற்படவில்லை என்றும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த 50 தற்காலிக வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கிராண்ட்பாஸ் பொலிசார் மற்றும் தீயணைப்புப் படையினரின் இணைந்த செயற்பாட்டில் தீ அனர்த்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஸ)

## புதிய கிரிக்கெட் யாப்பு;...

அவற்றை சமர்ப்பிக்குமாறு பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எதிர்வரும் ஜுன் மாதம் 08ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ இந்த ஆட்சேபனைகளை முன்வைக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இம் மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்னே கொறயா ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் வீரர்களான முத்தையா முரளிதரன், சிதத் வெத்தமுனி ஆகியோர் உள்ளிட்ட 12 பேரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா கிரிக்கட் நிறுவனத் தலைவர் உள்ளிட்ட 19 பேர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

## 1,000 ரூபா சம்பள விடயம்...

நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர்,

2015 இல் 1,000 ரூபா சம்பள உயர்வு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால் எமது அரசாங்கமே அதனை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்தது. இதற்காக 12 சுற்று பேச்சு நடத்தப்பட்டது. தொழிற்சங்கங்களுக்கும் கம்பனிகளுக்குமிடையில் உடன்பாடு எட்ட முடியாமல் போனதால் வர்த்தமானி அறிவிப்பினூடாக 1,000 ரூபா வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.இதற்கு எதிராக தோட்டக் கம்பனிகள் நீதிமன்றம் சென்றுள்ளன. தோட்டங்களின் உரிமை அரசுக்கே இருக்கிறது.குத்தகைக்கே அவை வழங்கப்பட்டுள்ளன. வழக்குத் தாக்கல் செய்து காலங் கடத்துவதே கம்பனிகளின் நோக்கமாகும். வழக்கு விசாரணை மு டி ய பல வருடங்கள் செல்லும். இதற்கு மாற்று வழிகளை அரசு எடுக்கும் என்றார். (பா)

## சர்வதேச சமூகத்தின் ஆதரவு...

வெளியிட்டார்.

கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் போது பெரும்பான்மையின மக்கள் இந்த அரசாங்கத்தை ஆதரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய அரசாங்கத்தையும் அதன் திட்டங்களையும் வடக்கு, கிழக்கு மக்களும் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். நாட்டின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஒற்றையாட்சி நிலையை பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இந்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டார்.

## வெளிநாடுகளில் கைதான நான்கு...

ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரையில் 05 நாடுகளில், 54 இலங்கையர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.அவர்களுள் 50 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இந்த நிலையில், ஏனைய நான்கு இலங்கையரையும், நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்க...

உயர்ஸ்தானிகரை சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் 13ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.ஸ்ரீதரன், இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட பிரதிநிதிகளையும் அவர் சந்தித்திருந்தார்.

அத்துடன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலானான பிரதிநிதிகளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரையும் அவர் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த சகல சந்திப்புகளிலும் தமிழ்த் தலைவர்கள், மாகாணத்தில் இந்திய நன்கொடையின் கீழான அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் அடிப்படையில் மேலதிக பொருளாதாரம், முதலீடு மற்றும் மேலதிக உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவற்றுக்கான உதவியை கோரியுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இந்த விடயங்களில் தனது தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குமென உயர் ஸ்தானிகர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாலும் மக்களாலும் முன்வைக்கப்படும் தேவைகளுக்கு அமைவாக மாகாணங்களின் அபிவிருத்திக்காக இந்தியா நீண்டகாலமாக ஒத்துழைப்பை வழங்குவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கௌரவம், சமாதானம், நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றுக்கான தமிழ் சமூகத்தின் நியாயபூர்வமான அபிலாசைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாடு தொடர்பில் நினைகூர்ந்த இந்திய உயர் ஸ்தானிகர், ஐக்கிய இலங்கைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஒன்றின் ஊடாக அவற்றை உறுதிப்படுத்துவது நாட்டின் சமாதானம் நல்லிணக்கம் வினைத்திறன் மிக்க முன்னேற்றம் மற்றும் ஐக்கியம் ஆகியவற்றுக்கு பங்களிப்பு வழங்குமெனவும் குறிப்பிட்டார்.

## ஏப். 21 க்கு முன் பரிந்துரைகளை...

எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை நெலும்மாவத்தையிலுள்ள தலைமையகத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

எமது அரசாங்கத்திற்கு மிகப் பெரிய நோக்கம் உள்ளது. அதில் மிகவும் பிரயோசனமான விடயங்கள் காணப்படுகின்றன. அதற்கப்பால் செயற்பட வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதுபற்றி தெளிவான பணிப்புரையை அந்தந்த அரச நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளார்.

திகதி வாரியாக அந்த ஆணைக் குழுவிலுள்ள பரிந்துரைகளை எப்போது? எப்படி?, எந்த கால வரையறைக்குள் அமுலாக்குவது என்பது பற்றி ஜனாதிபதி தெளிவான பணிப்புரையை வழங்கியிருக்கின்றார்.

அவை அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னதாக இந்தவிடயத்தில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம். அனைவரும் எதிர்பார்க்கின்ற பிரதிபலன் கிடைக்கும் என எதிர்பார்த்திருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

துருக்கியைச் சேர்ந்த பெட்டோ என்கிற நிறுவனம், அந்நாட்டு ஜனாதிபதிக்கெதிராக கலகத்தைமேற்கொண்டது.

அந்நிறுவனத்தின் நிதி இலங்கைக்கு பெறப்பட்டுள்ளன. அதனுடன்கொடுக்கல் வாங்கல் செய்த சிலருடைய பெயர்களும் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு முழு விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

1,440 வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டமை குறித்து 35 பேர் கைது செய்யப்பட்டும், 07 பேருக்கெதிராக வழக்கு தொடர்ந்தும் உள்ளது. ஏனையவர்கள் மீதும் வழக்கு தொடரும்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. வாள்கள் இறக்குமதி குறித்து விசாரணையை உத்தரவிடும்படி கர்தினால் மனு தாக்கல் செய்துள்ளார்.

நாங்கள் நேரடியாகவே உத்தரவிட்டுள்ள நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவு கிடைக்கும்வரை நாங்கள் காத்திருக்க மாட்டோம் என்றும் தெரிவித்தார்.

## கொழும்பில் 60 வயதுக்கு...

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக இணையத் தளத்தின் ஊடாக தம்மை பதிவு செய்து கொள்ள இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொழும்பு மாநகரசபையின் www.colombo.mc.gov.lk என்ற இணையதளத்தினூடாகவும் அல்லது e.channelling.com என்ற இணைய தளத்தினூடாகவும் அல்லது e.channelling நடமாடும் சேவையூடாகவும் பதிவு செய்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தலைக்கவசம் அணிவதன்...

நுகர்வோர் சேவை அதிகார சபையும், வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

அமைச்சர் காமினி லொக்குகே மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவின் தலைமையில் இதன் ஆரம்ப நிகழ்வு கொழும்பு காலி முகத்திடலில் நேற்று (15) காலை நடைபெற்றது.

வாகன விபத்துக்களில் அதிகமாக பாதிக்கப்படுவோர் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்களே என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.இதனால் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகள் மற்றும் தலைக்கவசம் அணிதலின் முக்கியத்தும் பற்றி இந்த வேலைத்திட்டத்தின் போது தெளிவுபடுத்தப்படவுள்ளன.

நாட்டில், கடந்த 05 ஆண்டு காலப்பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் 5,677 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் பலியானதாகவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பான தலைக்கவசம் அணியாமை, அதிகரித்த வேகம், மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமை என்பனவே இந்த விபத்துக்களுக்கான காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மோட்டார் சைக்கிள்களால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவே, நாடாளாவிய ரீதியிலான வேலைத்திட்டம் நேற்று காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்டது.

## சமுர்த்தி பயனாளர்களை தொழில்...

விசேட கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இவ் விசேட கூட்டத்தின் நோக்கம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் விளக்கினார்.

சமுரத்தி கொடுப்பனவை பெறும், எனினும் அக் கொடுப்பனவு அவசியமற்றவர்களை நீக்குவதற்கு இதுவரை முறையான திட்டம் இல்லாத நிலையில், அவ்வாறான சமுர்த்தி பயனாளர்கள் வெளியேறும் போது அவர்களுக்கு 04 வீத சலுகை வட்டி விகிதத்தில் 05 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை எதிர்காலத்திலும் செயற்படுத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

நாடு முழுவதும் 17,62,655 குடும்பங்கள் சமுர்த்தி கொடுப்பனவை பெறும் அதேவேளை, அதற்காக அரசாங்கத்தினால் வருடாந்தம் 53,000 மில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது.

ஊனமுற்றவர்கள் அடையாளங்காணப்பட்டு அவர்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்தல் மற்றும் தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதேனும் நிவாரணங்களை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் இதன்போது அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். ஜனாதிபதி செயலணி ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த சமுர்த்தி பயனாளர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலிலுள்ள குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் ஆகியோரை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடலில் சமுர்த்தி, வதிவிட பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல, பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, இராஜாங்க அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன, பிரதமரின் ஒருங்கிணைப்பு பணிப்பாளர் கசுன் மாதுவகே, ஒருங்கிணைப்பு செயலாளர் துமீர தர்மவர்தன மற்றும் சமுர்த்தி, வதிவிட பொருளாதார,நுண் நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மத்ரஸா பாடசாலை விடயங்களில்...

மேற்கொள்வதற்கு தமக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள பொது ஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் பீரிஸ்;

நாட்டில் சுமார் இரண்டாயிரம் மத்ரஸா பாடசாலைகள் செயற்பட்டு வருகின்றன. அந்தப் பாடசாலைகளில் என்ன கற்பிக்கப்படுகின்றது? யார் கற்பிக்கிறார்கள்? போன்றவற்றை ஆராய்வதற்காக கடந்த நல்லாட்சி அரசாங்கம் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த காலத்தில் வெளிநாடுகளிலிருந்து 600 பேர் மத்ரஸா பாடசாலைகளில் கற்பிப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். பாதுகாப்புச் செயலாளராக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகித்த காலத்தில் அவ்வாறு இங்கு அவர்கள் வருவதற்கு இடமளிக்கப்படவில்லை.

அக்காலத்தில் புலனாய்வு ப் பிரிவினருக்கும் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்குமிடையில் சிறந்த தொடர்புகள் இருந்தன.

இத்தகைய நிறுவனங்களுக்கு இலங்கை வந்து கற்பிப்பதற்கு எவராவது விசா அனுமதிப் பத்திரம் கோருவார்களானால் அவர்களின் வரலாற்று விபரங்கள் அப்போது தேடிப்பார்க்கப்பட்டன. எனினும் நல்லாட்சி அரசாங்கத்தில் அந்த நடவடிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அத்தகையோருக்கு விமான நிலையத்திலேயே விசா பெற்றுக் கொடுப்பதற்கு அந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எந்தக் கேள்வியும் கேட்காமல் விசாரணையும் மேற்கொள்ளாமல் உடனடியாக அவர்களுக்கு விமான நிலையத்தில் விசா அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. அதுவே பெரும்பாலான பிரச்சினைகளுக்கு காரணமாகியுள்ளது.

இது போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது சட்டத்துக்கு விரோதமானதென எதிர்க்கட்சி எம்.பியும் நல்லாட்சி அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சருமான ஒருவர் தெரிவித்து வருகிறார். இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது எந்த விதத்திலும் சட்டவிரோதமாகாது.

நாட்டில் குரோதத்தையும் சந்தேகத்தையும் விதைக்கும் வகையில் நாட்டின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக மேற்படி மத்ரஸா பாடசாலைகள் நடத்தப்படுமானால் அதில் தலையிடுவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை உள்ளது.

அதுமட்டுமின்றி அது அரசாங்கத்தின் கடமையுமாகும். அந்த நிலையிலேயே அது தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் எமக்கு உத்தரவிட்டுள்ளது என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# சர்வதேச செய்திகள்

## இரத்தம் உறையும் அச்சம்

# அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசியை நெதர்லாந்தும் இடைநிறுத்தியது

பக்க விளைவு பற்றிய அச்சம் காரணமாக ஒக்ஸ்போர்ட்–அக்ஸ்ட்ராசெனக்கா கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து பயன்பாட்டை நெதர்லாந்தும் இடைநிறுத்தியுள்ளது.

இந்தத் தடுப்பூசிக்கும் இரத்தம் உறையும் பிரச்சினைக்கும் தொடர்பு இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐரோப்பாவின் மருத்துவ ஒழுங்குமுறை அமைப்பு குறிப்பிட்டுள்ளன.

எனினும் முன்னெச்சரிக்கையாக இந்தத் தடுப்பூசி பயன்பாடு குறைந்தது மார்ச் 29 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்படுவதாக நெதர்லாந்து அரசு குறிப்பிட்டுள்ளது.

நோர்வேயில் இரத்த உறைவு பற்றிய செய்தி வெளியானதை அடுத்து அயர்லாந்தும் இவ்வாறான நடவடிக்கையை எடுத்தது.

இதில் நோர்வேயில் அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசிகளை அண்மையில் போட்டுக்கொண்ட மூன்று சுகாதார ஊழியர்கள் இரத்தப்போக்கு, இரத்த உறைவு, குறைந்த இரத்த பிளேட்லட் அணுக்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.



தவிர, டென்மார்க், நோர்வே, பல்கேரியா, ஐஸ்லாந்து, கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் தாய்லாந்து நாடுகள் ஏற்கனவே அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்து போடுவதை இடைநிறுத்தியது. இத்தாலி மற்றும் ஆஸ்திரியா உட்பட மேலும் சில ஐரோப்பிய நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பு மருந்தின் ஒருசில வகைகளை பயன்படுத்துவதை இடைநிறுத்தியது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டனில் சுமார் 17 மில்லியன் பேர் தடுப்பு மருந்து பெற்றிருக்கும் நிலையில் 40க்கும் குறைவான இரத்த உறைவு சம்வங்களே பதிவாகி இருப்பதாக அஸ்ட்ராசெனக்கா தெரிவித்துள்ளது.

இரத்த உறைவு சம்பவங்கள் தொடர்பில் மீளாய்வு செய்திருக்கும் ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம், தடுப்பு மருந்தை தொடர்ந்து வழங்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளது. தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களில் இந்த இரத்த உறைவு சம்பவங்கள் சாதாரண பொதுமக்களிடம் காணப்படும் எண்ணிக்கையை விடவும் அதிகமாக இல்லை என்று அது குறிப்பிட்டுள்ளது.

இந்த தடுப்பு மருந்தால் இரத்தம் உறையும் சம்பவம் ஏற்பட்டதற்கான ஆதாரம் இல்லை என்று பிரிட்டன் மருந்துகள் ஒழுங்குமுறை நிறுவனமும் குறிப்பிட்டுள்ளது. மக்கள் தடுப்பு மருந்தை போட்டுக்கொள்ளும்படியும் அது வலியுறுத்தியுள்ளது.

# ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்கா உலகில் தொடர்ந்து முன்னிலை

அமெரிக்கா கடந்த ஐந்து ஆண்டுகளில் சர்வதேச ஆயுத ஏற்றுமதியின் பங்கை 37 வீதம் அதிகரித்திருப்பதாக சுவீடனை தளமாகக் கொண்ட ஆய்வு நிறுவம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் சீனாவின் ஆயுத ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில் அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி நாடுகளின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

பனிப்போருக்குப் பின்னர் ஆயுத ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உச்ச மட்டத்தை நெருங்கி இருப்பதோடு கொரோனா பெருந்தொற்றினால் இந்த நிலையில் மாற்றம் ஏற்படக் கூடும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஆயுத இறக்குமதியில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

“ஆயுத ஏற்றுமதியின் வேகமான வளர்ச்சி ஏற்பட்ட கடந்த இரண்டு தசாப்த காலத்தின் முடிவு இது என்று இப்போதே கூறமுடியாதுள்ளது” என்று இது பற்றிய தரவுகளை சேகரித்த ஸ்டொக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த ஆய்வாளர் பீட்டர் வெசமன் தெரிவித்துள்ளார்.

“கொரோனா தொற்றினால் ஏற்பட்ட தாக்கம் காரணமாக எதிர்வரும் ஆண்டுகளில் ஆயுத இறக்குமதி பற்றி சில நாடுகள் மீளாய்வு செய்யக்கூடும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.



எனினும் முந்தைய ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2016 மற்றும் 2020க்கும் இடைப்பட்ட காலத்தில் சர்வதேச ஆயுத விற்பனை ஸ்திர நிலையில் காணப்பட்டுள்ளது.

இதில் அமெரிக்க ஆயுத ஏற்றுமதிகளில் கிட்டத்தட்ட (47 வீதம்) பாதி அளவானது மத்திய கிழக்கிற்கு சென்றுள்ளன. சவூதி அரேபியா மாத்திரம் அமெரிக்க மொத்த ஆயுத ஏற்றுமதியில் 24 வீதத்தை வாங்கியுள்ளது.

அமெரிக்கா தற்போது 96 நாடுகளுக்கு ஆயுதங்களை விற்கும் நிலையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆயுத விற்பனையில் அதன் சர்வதேச பங்கு அதிகரித்துள்ளது.

பிரான்ஸின் ஆயுத ஏற்றுமதி 44 வீதமாகவும் ஜெர்மனியின் விற்பனை 21 வீதமாகவும் அதிகரித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் தென்கொரியாவின் ஆயுத விற்பனை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தபோதும் ஒப்பீட்டளவில் அந்த நாடுகளின் ஆயுத ஏற்றுமதி மிகக் குறைவாகவே உள்ளது.

இதில் சீனா மற்றும் ரஷ்யாவின் ஆயுத ஏற்றுமதி வீழ்ச்சி கண்டபோதும் துணை சஹாரா ஆபிரிக்க நாடுகளுக்கு ஆதிக ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகளாக இந்த இரு நாடுகளும் உள்ளன.

# மியன்மாரில் போராட்டக்காரருக்கு எதிராக இராணுவச் சட்டம் அமுல்

மியன்மாரில் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஒரே நாளில் கடந்த ஞாயிறன்று அதிகம் பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து மேலும் பல மாவட்டங்களில் இராணுவ சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் மற்றும் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவங்களில் சுமார் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். யங்கோன் நகரில் அதிக உயிரிழப்பு நேர்ந்துள்ளது.

இராணுவ சதிப்புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஆளும் கட்சியின் தலைவரான ஆங் சான் சூச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவிருந்த நிலையிலேயே அங்கு ஆர்ப்பாட்டம் தீவிரம் அடைந்துள்ளது.

எனினும் இணையதளத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நேற்று இடம்பெறவிருந்த வீடியோ மூலமான அவரது விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

நாட்டில் இடம்பெறும் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்களில் ஜனநாயகத்திற்கான தேசிய லீக்கின் தலைவர் சூச்சியை விடுவிக்கும்படி கோரிக்கை விடுக்கப்படுகிறது. அவரது கட்சி கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றியீட்டியது. இராணுவம் ஆட்சியை கைப்பற்றிய கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி தொடக்கம் சூச்சி அடையாளம் தெரியாத இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோதும் அவை



சோடிக்கப்பட்டவை என்று சூச்சியின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவ சதிப்புரட்சியை அடுத்து சூச்சி கட்சியைச் சேர்ந்த பலரையும் இராணுவம் கைது செய்தது. கடந்த ஆண்டு தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக இராணுவம் குற்றம்சாட்டியுள்ளது. எனினும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரமும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சீன வர்த்தக நிறுவனங்கள் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து நாட்டின் மிகப்பெரிய நகரான யங்கோனின் இரு மாவட்டங்கள் மீது இராணுவ சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இது நேற்று யங்கோன் மற்றும் மண்டலாயின் ஏனைய பகுதிகளுக்கு விரிபடுத்தப்பட்டுள்ளது.

இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவ நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியுமாகியுள்ளது. மியன்மார் இராணுவத்திற்கு சீனா உதவுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம்சாட்டும் நிலையிலேயே சீன இலக்குகள் தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு படையினரின் ஒடுக்குமுறையால் மியன்மாரில் இதுவரை 120க்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அரசியல் கைதிகளுக்கான உதவிச் சங்கம் என்ற கண்காணிப்புக் குழு குறிப்பிட்டுள்ளது.

எனினும் மண்டலாய் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் நேற்று புதிய ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. மத்திய நகரங்களான மன்கியான் மற்றும் அங்கலானில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி இருக்கும் நிலையில் உயிரிழப்புகள் பதிவாகி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பெண் பாடத் தடை: ஆப்கானில் சர்ச்சை



ஆப்கானிஸ்தானில் பெண் பிள்ளைகள் பொது இடத்தில் பாட்டுப்பாடுவதற்கு அந்நாட்டு கல்வி அமைச்சு அதிகாரிகள் விதித்த தடை கடும் எதிர்ப்பை அடுத்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.

தலைநகர் காபுலின் கல்விப் பணிப்பாளர் கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில் 12 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பொது இடத்தில் பாடுவதற்கு தடை விதிப்பதாக கூறப்பட்டிருந்தது.

எனினும் இதற்கு சமூக ஊடகத்தில் பரவலாக விமர்சனம் எழுந்தது. பெண்கள் பாட்டுப்பாடிய வீடியோக்களை வெளியிட்டு இதற்கு எதிர்ப்பை வெள்ளிட்டனர்.

கல்வி அமைச்சு, சிறுமிகள் பாடுவதற்குத் தடை விதிப்பது மூலம் அவர்களின் குரலைப் பறித்துக் கொள்வதாகத்தேசியப் பெண்கள் கால் பந்துக் குழுவின் முன்னாள் தலைவி ஷாமிலா கோஹிஸ்டானி தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவு செய்தார்.

நாட்டின் கல்வித் துறை தலிபான் கொள்கைக்கு திரும்பும் அச்சத்தை இந்த அறிவிப்பு வெளியிட்டது. தலிபான்கள் ஆட்சியில் பெண்கள் வீட்டுக்கு வெளியில் எந்த ஒரு சமூக செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு கடும் கட்டுப்பாடு கொண்டுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானைவிட்டு அமெரிக்கத் துருப்புகள் வெளியேறலாம் என்று கூறப்படும் வேளையில், தலிபான் மீண்டும் பதவிக்கு வரலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது.

இந்நிலையில் இந்த அறிவிப்பு அமைச்சின் கொள்கை மற்றும் நிலைப்பாட்டை பிரதிபலிக்கவில்லை என்று கல்வி அமைச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இதற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அது உறுதி அளித்திருந்தது.

# தடுப்பூசி வதந்திகளுக்கு பேஸ்புக் முட்டுக்கட்டை

தடுப்பூசிகளையும் அதன் பாதுகாப்பையும் பற்றி விவாதிக்கும் பதிவுகளுக்கு முத்திரையிட ஆரம்பித்திருப்பதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தடுப்பூசியைப் பற்றிய தவறான தகவல்களை அதன் தளங்களில் பரப்ப பேஸ்புக் அனுமதித்ததாக பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆய்வாளர்கள் போன்றோர் குறை கூறியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் முத்திரையிடும் அறிவிப்பு வந்துள்ளது. அமெரிக்காவில் கொவிட்–19 தடுப்பூசிகளை எங்கு பெறுவது என்பது பற்றிய தகவல்களை மக்களுக்கு வழங்குவதாக பேஸ்புக் நிறுவனம் அதன் இணையப் பதிவில் தெரிவித்தது.

அதன் புகைப்படப் பகிர்வுத் தளமான இன்ஸ்டாகிராமில் கொவிட்–19 தகவல் பகுதியைச் சேர்ப்பதாக அது கூறியது. நோய்த்தொற்றுக் காலத்தில் தடுப்பூசிகள் பற்றிய தவறான கருத்துகள் சமூக ஊடகத் தளங்களில் அதிகரித்துள்ளன. அதைச் சமாளிக்க பேஸ்புக், இன்ஸ்டாகிராம் இரண்டும் அண்மையில் அவற்றின் கொள்கைகளைக் கடுமையாக்கின.

அங்கீகாரம் அளிக்கப்படுவதற்கு முன்னர், தடுப்பூசிகள் பாதுகாப்புச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன என்ற செய்தியுடன் வரும் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் பதிவுகளுக்கு முத்திரையிடப்படுவதாக நிறுவனம் கூறியது.





# பீஜிங்கில் பெரும் மணல் புயல்: அபாய நிலையில் காற்று மாசு

சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்றுக் காலை மணல் புயல் வீசியதில் காற்றில் அடர்ந்த துகள்கள் படிந்துள்ளன.

மங்கோலியாவில் இருந்தும் சீனாவின் வடமேற்குப் பகுதிகளிலிருந்தும் அந்தப் புயல் வீசியது. பீஜிங்கைச் சுற்றியுள்ள கான்சு, ஷான்ஸி, ஹெபெய் ஆகிய பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

சீனாவின் வானிலை ஆய்வுத்துறை நிர்வாகம் நேற்றுக் காலையில் அங்கு மஞ்சள் நிற எச்சரிக்கையை விடுத்துள்ளது. பீஜிங்கில் காற்றுத் தூய்மைக்கேடு அதிகபட்ச நிலையான 500ஐ எட்டியது. சில பகுதிகளில் ஒரு கன மீற்றருக்குச் சுமார் 2,000 மைக்ரோகிராம்அளவிலானபீ.எம்10துகள்கள் இருந்தன.

நுரையீரலுக்குள் நுழையக்கூடிய பீ.எம்2.5 துகள்கள் கன மீற்றருக்கு 300 மைக்ரோ கிராம் அளவில் இருந்தன.

சீனாவின் வடபகுதியில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால், அதன் அருகில் உள்ள கோபி பாலைவனத்திலிருந்து வீசும் புயல் சீனாவிற்குள் மணலைக் கொண்டுவருவது வழக்கம். இது பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நிகழும்.

கடந்த சில வாரங்களாகப் பீஜிங்கிலும் அதைச் சுற்றியுள்ள வட்டாரங்களிலும் காற்றுத் தூய்மைக்கேடு மோசமான நிலையை அடைந்துள்ளது.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 மார்ச் 16
செவ்வாய்க்கிழமை

### வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள்;

# எட்டாவது நாளாக உண்ணாவிரதம்; மயங்கிய நிலையில் சிலர் வைத்தியசாலையில்

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர்ந்து 8 வது நாளாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் நேற்று யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதி மற்றும் ஆளுநர் செயலக நுழைவாயில்களை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டிருந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகைதந்த யாழ்ப்பாண காவல்துறையினர் மாற்று வீதியால் பயணத்தை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் மற்றும் சாரதிகளிடம் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர் மயக்கமடைந்து விழுந்த நிலையில் உடனடியாக எம்பியூலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.






அத்தோடு உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பெண் சுகாதார தொண்டர் ஒருவர் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமக்கான தீர்வு வழங்காத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உண்ணாவிரத போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டம் இடம்பெறுகின்ற இடத்திற்கு ஒரு சில தமிழ் அரசியல் பிரதிநிதிகள் வருகை தந்திருந்த போதிலும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் இதுவரை வருகை தரவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கைதடி -குமரநகர் பகுதியில்

# உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம்

***சாவகச்சேரி விசேட நிருபர்***

கைதடி குமரநகர் பகுதியிலுள்ள தோட்டக் காணியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பிரதேச மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.குமரநகர் கைதடி பகுதியைச் சேர்ந்த 60 வயதான சரவணன் முருகேசு என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கைதடிசேதுகாவலர் விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள அவருக்கு சொந்தமான தோட்டக் காணியில் இருந்தே அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த நபர் பிள்ளைகள் திருமணம் செய்த நிலையில் வெளிநாடு மற்றும் வேறு பிரதேசத்தில் வசித்து வரும் நிலையில் தனித்து வாழ்ந்து வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் தங்களது பிரதேசத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (15) விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுப்பட்ட போது...

(படம்: கிளிநொச்சி குறூப் நிருபர்)

# கனடா செல்ல முயன்றவர்களில் 5 பேர் முல்லைத்தீவை சேர்ந்தவர்கள்

***புதுக்குடியிருப்பு விசேட நிருபர்***

புத்தளத்தில் இருந்து கனடா செல்ல முயன்றவர்களில் 5 பேர் முல்லைத்தீவினை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

போலி தரகர்களை நம்பி வெளிநாட்டு ஆசையில் புத்தளத்தில் இருந்து படகு ஊடாக கனடா அனுப்பவுள்ளதாக ஆசை வார்த்தை காட்டி,பணங்களையும்,காணிகளையும் ஈடுவைத்து நம்பி ஏமாறுபவர்களின் கதை வடக்கில் தொடர் கதையாகவே உள்ளது.குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களை இலக்கு வைத்து இவ்வாறான ஆட்கடத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த 11.03.21 இவ்வாறு கடல்வழியாக நாட்டை தப்பிச் செல்ல முயற்சித்தவர்களை கடற்படையினர் தரையில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவர்கள் தரகர்கள் ஊடாக கொழும்பிற்கு அழைக்கப்பட்டு அங்கு விடுதி ஒன்றில் பல நாட்கள் தங்கவைக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து புத்தளத்திற்கு அழைக்கப்பட்டு வான் ஒன்றில் கற்பிட்டி களப்பிற்கு அருகில் இறக்கிவிடப்பட்ட வேளை இவர்களையும் வாகனத்தினையும் கடற்படையினர் கைது செய்துள்ளார்கள்.

இவர்களில் 9 பேர் மட்டக்களப்பையும் 6 பேர் யாழ்ப்பாணத்தையும் 5 பேர் முல்லைத்தீவையும் 3 பேர் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள என்றும் இவர்களை ஏற்றிச்சென்ற வாகனத்தின் சாரதி புத்தளத்தைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கற்பிட்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் புத்தளம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது இவர்கள் தலா இரண்டு ஆட் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

# கிளிநொச்சி வட்டக்கச்சியில் வீட்டுக்கு தீ! பழைய பகையால் நேர்ந்த சம்பவம்

***கிளிநொச்சி குறூப் நிருபர்***

கிளிநொச்சியில் வட்டக்கச்சி பகுதியில் 10.03.2021 இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் பலியான அருளம்பலம் துஷ்யந்தன் மீது கத்தியால் குத்திய நபரின் வீட்டிற்கு தீ வைக்கப்பட்டுள்ளதோடு, இறந்தவரின் மனைவி மற்றும் சகோதரிகள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.





இச் சம்பவம் நேற்று காலை பத்து மணிக்கு இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் சந்தேக நபர்களின் வீட்டில் சில பொருட்களை எடுத்துச் செல்வதற்கு உறவினர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் சென்ற நிலையில் இறந்தவரின் மனைவி மற்றும் சகோதரிகள் உட்பட கிராம மக்கள் சிலர் ஒன்று சேர்ந்து இறந்தவருக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் போதுமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்து பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுப்பட்டனர். இதன் போதே பொலிஸார் அவர்கள் மீது தாக்குதலை மேற் கொண்டுள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில் கத்தி குத்து மேற்கொண்டவரின் வீட்டின் மீது தீ வைக்கப்பட்டுள்ளது. தீயினை பொலிஸார் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

### புரவி புயலால் பாதிக்கப்பட்ட

# இரணைதீவு இறங்குதுறையை அபிவிருத்தி செய்ய கோரிக்கை

***பரந்தன் குறூப் நிருபர்***



கிளிநொச்சி இரணைதீவு இறங்குதுறை புரவி புயலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதனை மீள் அபிவிருத்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இரணைதீவு பகுதியில் புதிதாக சர்வதேச நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட இறங்குதுறை அபிவிருத்தியானது பல மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த அபிவிருத்தி பணிகள் நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வருடம் இடம்பெற்ற புரவி புயலின் தாக்கத்தினால் அது முழுமையாக சேதமடைந்துள்ளது.

நடை பாதைக்காக அமைக்கப்பட்டிருந்த கொங்கிரீட்டுகளும் புரவி புயலினால் முழுமையாக சேதமடைந்து இன்று மக்கள் பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. 2019ம் ஆண்டு குறித்த பகுதியில் மீள்குடியேறிய மக்களின் பயன்பாட்டிற்காக சர்வதேச நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்ட இந்த இறங்குதுறையானது தரமான கட்டுமான பணிகள் இடம்பெற்றிருந்தாலும், இயற்கை அனர்த்தத்தினால் முழுமையாக இன்று அழிவடைந்து காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இறங்குதுறையை மீள் அபிவிருத்தி செய்து, மக்களின் பயன்பாட்டிற்காகவும், தமது பொருளாதார மேம்பாட்டிற்காகவும் அபிவிருத்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

### வடமாகாண ஆளுநர் தலைமையில்

# வருடாந்த அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்

வடக்கு மாகாண திணைக்களங்களின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம். சாள்ஸ் தலைமையில் வடமாகாண சுகாதார திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது

இக் கலந்துரையாடலில் வீட்டுத்திட்ட அபிவிருத்தி, உட்கட்டமைப்பு, விவசாயம், கல்வி, சுகாதாரம், மற்றும் கிராமிய அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து துறையினதும் துறைரீதியான திட்டங்கள் மற்றும் அவற்றிற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,.... covid19 தொற்றிடர் காரணமாக கடந்த பல மாதங்களாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி நிலையில் காணப்படுகின்றது. இந் நிலையில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதனை விடுத்து ஏற்கனவே உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலாத்துறை இடங்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்யவும், அதேபோன்று வீதி அபிவிருத்திகளை மேற்கொள்ளவும் ஆலோசனை தெரிவித்தார்.

மேலும் அரசினால் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்ற போதிலும் முறையான settlment policy செய்யப்படுவதில்லை என்பது முக்கிய குறைபாடும். அதாவது மக்களின் நிரந்தர வதிவிடம் ஓரிடத்திலும் அவர்களின் வாழ்வாதார செயற்பாடுகள் இன்னொரு இடத்திலும் செயற்படுத்தப்படுவதால் பல்வேறு இடங்களில் முறைபாடுகள் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இதனால் முதலீட்டு செலவு குறைவாககாணப்படுகின்றது.

மேலும், கல்வி, மற்றும் சுகாதார துறைகளை பொறுத்தவரை கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பாடசாலைகளில் மாணவர்களுக்கான முறையான மலசலகூட பற்றாக்குறை மற்றும் கிராமப்புற வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் இத்துறைகளை மட்டுமன்றி அனைத்து அரச நிறுவனங்களிலும் காணப்படுகின்றமையை குறித்த கிராமப்புறங்களிற்கு சென்றிருந்தபோது அவதானித்ததாக ஆளுநர் தெரிவித்தார்.



# யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பில் ஆட்களற்ற இந்திர ரோலர் படகு

***கோப்பாய் குறூப் நிருபர்***

யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பில் சனிக்கிழமை இரவு கரையொதுங்கிய ஆட்களற்ற இந்திர ரோலர் படகு தொடர்பில் கடற்படையினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,....

நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய இலக்கம்,பெயர் பொறிக்கப்பட்ட ரோலர் படகு கரை ஒதுங்கியுள்ளது. இந்த படகினை சோதனையிட்ட போது படகில் யாரும் இல்லாத நிலையில் படகு கரை ஒதுங்கியதை உறுதி செய்தனர்.

இந் நிலையில் குறித்த படகில் வந்தவர்கள் யார்? அவர்களுக்கு என்ன நடந்தது எனக் கடற்படையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எல்லையற்ற இறையன்பின் வெளிப்பாடு இயேசுவின் கல்வாரி திருச்சிலுவை



சில ஆலயங்கள் வழிபாட்டுக்குரிய புனிதத் தலங்களாக மட்டுமல்ல கருத் தாழமிக்கக் கலைக் கூடங்களாகவும் காட்சி தருகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்து நாட்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகச் சிற் றாலயம் ஒன்றில் அமைந்திருந்த கண்ணா டிச் சித்திரம் அதற்குச் சான்று. பீடத்துப் பின் சுவரில் நுழைந்ததும் கண்ணில் பட்டு ஈர்க் கும் வகையில் இருந்தது அந்த ஓவியம். கண்ணாடியின் வெளிப் புறம் பழைய ஏற்பாட்டு நிகழ்வும் உட் புறம் அதற்கு இணையான புதிய ஏற்பாட்டு நிகழ்வும் ஓவி யங்களாகத் தீட்டப்பட்டிருந்தன. வெளியிலிருந்து ஒளி கண்ணா டியை ஊடுருவுகிறபோது இரண்டு காட்சிகளும் ஒருங்கிணைந்து ஒன்றுக் கொன்று நிறைவும் பொருள் விளக்கமும் தருவதாகத் தெரியும்.




ஆலயத்தில் உள்ளே இருந்து அந்தக் கண்ணாடியை உற்றுப் பார்த்தால் மோரியா மலையில் ஆபிரகாம் தன் மகன் ஈசாக் கைப் பலி கொடுக்க ஓங்கிய கையோடு இருப்பது மென்மை யான ஒளியின் பின்னணியில் தெரியும்.

அதே நேரத்தில் கல்வாரிச் சிலுவையும் தெரியும். சிறிது அசைந்து வேறொரு கோணத் தில் கம்பத்தில் உயர்த்திய வெண் கலப் பாம்பையும் பார்க்கலாம்.

இயேசுவின் தியாக மரணம் பழைய ஏற்பாட்டில் நிழலாடும் நிகழ்வாகவும் புதிய ஏற்பாட்டில் நிறைவு காணும் நிகழ்வாகவும் இறைவனின் ஒட்டு மொத்த மீட்புத் திட்டத்தை இப்படித் தெளிவு படுத்துகின்றன!

திருவிவிலியம் முழுவதுமே மனித மீட் புக்காகத் தன்னுயிர் ஈந்த இயேசுவின் சிலுவையை மையமாகக் கொண்டது. கொள்ளி வாய்ப் பாம்புகளால் கடியுண்ட இஸ் ரயேல் மக்கள் சாவினின்று விடுதலை பெற கோலில் உயர்த்திய வெண்கலப் பாம்பை நோக்கியது போல, நிலைவாழ்வு காண சிலு வையில் தொங்கும் இயேசுவை நோக்கி மனத்தைத் திருப்பத் தவக்காலம் நம்மை அழைக்கிறது.

"பாம்புகளும் ஏணிகளும் என்ற விளை யாட்டு நாம் அறிந்தது. வீடு நோக்கிய பயணம். பாதை முழுவதும் சிறிதும் பெரி துமாக பாம்புகளும் ஏணிகளும். தாயத்தை உருட்டிப் போட அதில் வரும் எண்களுக் கேற்ப காயை நகர்த்துகிறோம்.

யார் முதலில் வீட்டை அடைவது என்பதுதான் போட்டி. காய் ஏணியைத் தொட்டால் மேலே கிடுகி டுவென ஏறும். பாம்பின் வாயில் பட்டால் மடமடவெ னக் கீழே இறங்கும். வீட்டை நெருங்கிய நேரத்தில் கூட பாம்பால் கடியுண்டு கீழே படு பள்ளத்தில் இறங்க நேரிடும்.

வாழ்க்கையும் அப்படித் தான். நமக்குப் பாம்பு எது, ஏணி எது?

பழைய உடன்படிக்கை யில் பாலைவனத்தில் இறை வனுக்கும் மோசேக்கும் எதிராகக் கைகளை உயர்த் தியவர்களை, குரல் எழுப் பியவர்களைக் கொள்ளி வாய்ப் பாம்புகள் கடிக்க, இறைவனின் ஆணைப்படி மோசே வெண்கலத்தால் பாம்பு ஒன்றைச் செய்து அதை உயர்த்திப் பிடித்தார். அதை உற்று நோக்கியவர் கள் உயிர் பிழைத்தனர் (எண்.24:49)

உலக மருத்துவத் துறை தனது சுகமளிக்கும் தொழிலின் அடையாளச் சின்னமாகக் கொண்டி ருப்பது இந்தக் "கோலில் சுற்றிய பாம்பு".



விவிலியத்தில் பாம்பு பாவத்தின் சின்னமாகச் சித்திரிக்கப் படுகிறது. (ஏதேன் தோட்டத்தில் ஏவாளை வஞ்சித்த காரணத்தால்) பாவத்தின் தண்டனையாகக் குறிக்கப்படுகிறது. (கொள் ளிவாய்ப் பாம்புகளைக் கொண்டு இஸ்யே லரைக் கடிக்க வைத்ததால்) பாவத்தின் கழுவாயாக ஆக்கப்படுகிறது (வெண்கலப் பாம்பை பார்த்தவர்களை சாவினின்று விடு வித்ததால்). இந்த நிகழ்ச்சியுடன் தொடர்புப டுத்தி, மனித இனம் வாழ்வு பெற "பாலை நிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட் டது போல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும்" என்கிறார் இயேசு.சிலை வழி பாட்டை வீரியத்துடன் எதிர்த்த இறைவன் வெண்கலப் பாம்பைச் செய்ய ஆணையிட் டது வியப்பைத் தருகிறது. இதனால் வெண் கலப் பாம்பைச் சிலுவையின் முன் அடை யாளமாக இறைவன் மனத்திலிறுத்தி இந்த ஆணையைத் தந்திருக்க வேண்டும், நிழலின் அருமை வெயிலில் தெரியும். இறைவனின் அன்பு சிலுவையில் தெரியும். சிலுவை ஒரு பக்கம் பாவத்தின் கொடுமையை வெட்ட வெளிச்சமாக்குகிறது. மறுபக்கம் எல்லை யற்ற இறையன்பை வெளிப்படுத்துகிறது.

மீட்பு என்பது என்ன? இறையன்பின் அர வணைப்பிலிருந்து விலகிச் சென்ற நாம், மீண்டும் மனந்திரும்பி அந்த அன்பின் அரவணைப்புக் குள் வருவதுதான். அதற் குப் பாலைவனப் பாம்பாக இயேசு சிலுவையில் உயர்த் தப்படுகிறார். அவரைப் பார்த்து அவரோடு ஒன்றிக் கும்போது நாம் மீட்படைகி றோம்.

யோவானின் இறையி யல் பார்வையில் இயேசு சிலுவையில் அறையப் படவில்லை; உயர்த்தப்பட் டார். அதாவது மாட்சிமை அடைந்தார். சிலுவைச் சாவு இயேசுவுக்கு மகிமையின் வாயில், மரணமடையும் நேரத்தை மாட்சிமை பெறும் நேரம் என்றே சொல்வார் (யோ. 12:23) துன்புறும் இறைஊழியன் பற்றி கவி தையிலும் ஏசாயா அதே சிந்த னையைத் தருவார் (எசா.52:13) கிறிஸ்து மூன்றுமுறை தன் பாடுகளை முன்னறிவிப்பதாக மத்தேயு எழுதுகிறார் (மத்.16:21, 17:33, 20:18). இயேசு மூன்று முறையும் உயர்த்தப்படுவதாகவே குறிப்பிடுகிறார். (யோ. 3:14, 8:28, 12:32)

சிலுவையில் உயர்த்தப்பட்ட வரை உற்றுநோக்குங்கள் பாவ நஞ்சு நீங்கும்.உயிர் பெற்று வாழ்வோம்.

பாவ இருளின் பிடியில் நாம் சிக்கி அழியா வண்ணம் "நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப் பினார் என்பதில் தான் அன்பின் தன்மை விளங்குகிறது" (1 யோ.4:9,10)

அன்பே கடவுள். நம்பிக்கையே வாழ்வு!

அருட்பணி
இ.லூர்து ராஜ்...

# பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் பாப்பிறை பணியில் எட்டு வருட நிறைவு



திருச்சபையின் தலைவராம் பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் தாம் பாப்பரசராக திருநிலைப்படுத்தப்பட்ட நினைவு தினத்தை கடந்த மார்ச் 13ஆம் திகதி நினைவு கூர்ந்தார்.

வத்திக்கானில் அதனையொட்டிய சிறப்பு வழிபாடுகளும் சிறப்புத் திருப்பலியும் இடம் பெற்றன.

2013ம் ஆண்டு மார்ச் 13ம் திகதி கத்தோலிக்கத் திருச் சபையின் தலைவரா கத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் இயேசு சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலா வது பாப்பரசராவார்

அதற்கிணங்க தனது பாப்பிறை தலைமைப் பணியில் 8 ஆண்டுகளை நிறைவுசெய்யும் திருத்தந்தை பிரான்சிஸ்

இக் காலங்களில் கத்தோலிக்க மக்கள் திருச்சபையை வித்தியாசமான கோணத்தில் பார்ப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

2013ம் ஆண்டு மார்ச் 13ம் தேதி, ஆர் ஜென்டீனா நாட்டிலிருந்து திருச்சபையின் தலைமைப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை உலகம் வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தவே ளையில் அவர் தன்னோடு நற்செய்தியின் மகிழ்வைக் கொண்டுவந்தார் என அருட்பணி யாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். பரிசுத்த பாப்பரசரின் பணிக்காலத்தின் இந்த எட்டு ஆண்டுகள் சாதனை நிறைந்தவை எனக் கூறலாம்.

நாம் திருச்சபையை நோக்கும் முறையை முழுவதுமாக மாற்றியுள்ளார் என்று கூறமு டியும். அவரது முதல் நற்செய்தியின் வார்த் தைகள், கோட்பாடுகள் பற்றியோ சட்டங்கள் பற்றியோ அன்றி மாறாக, அவை கடவுளின் பரிவன்பு மற்றும் இரக்கத்தையே அடிப் படையாகக் கொண்டிருந்தன. குறிப்பாக ஏழைகள், சமூகத்தில் விளிம்புநிலையில் வாழ்வோர், புலம்பெயர்ந்தோர், வீடற்றோர், மற்றும் நோயாளிகளுக்கு பரிவன்பைக் காட்டுவதாக அமையவேண்டும் என்ற கோட் பாட்டை திருத்தந்தை, பொதுப்படையாகவும் தவறாமலும் செயல்படுத்தி வருகிறார்.

நம் கிறிஸ்தவ நம்பிக்கையை எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதைவிட, எவ்வாறு அதை வாழ்கிறோம் என்பதில் திருத்தந்தை மிகுந்த ஆர்வமாக உள்ளார். இந்த விடயத்தில் திருச்சபையில் திறந்தமன துடன் கலந்துரையாடல், மற்றும் விவாதங் கள் நடைபெறவும் ஊக்கப்படுத்தி வருகிறார் என்பதே கிறிஸ்தவ அறிஞர்களின் கண் ணோட்டமாகும்.

திருச்சபையின் வரலாற்றில் முதன் முறையாக தனக்கு ஆலோசனை வழங்குவ தற்காக ஒன்பது பேர் கொண்ட கர்தினால்கள் அவையை திருத்தந்தை பிரான்சிஸ் உருவாக் கியுள்ளார்.

84 வயதை நிறைவு செய்யும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2013ம் ஆண்டு மார்ச் 13ம் திகதி கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் அமெரிக்காவிலிருந்தும் இயேசு சபையிலி ருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந் தையாவார். Jorge Mario Bergoglio என்ற இயற்பெயரைக் கொண்ட திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் 1936ம் ஆண்டு டிசம் பர் 17ம் திகதி ஆர்ஜென்டீனா நாட்டுத் தலை நகர் புவனோஸ் அய்ரஸ் நகரில் பிறந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அனைத்து நாடுகள், அனைத்து சமயங் களு டனும் அமைதிக்கும் நல்லிணக்கத்துக் கும் தமது அரிய பணிகள் மூலம்செயற் பாடுகளை முன்னெடுக்கும் பரிசுத்த பாப்பர சரது மேய்ப்புப் பணி மென்மேலும் சிறக்க நம் ஆண்டவர் இயேசு அவருக்கு அதிகம் அதிகமான அருள் வரங்களைப் பொழிய வேண்டும் என்றும் நாம் பிரார்த்திப்போம்.

எல்.எஸ். ...

# ‘மனிதரின் மீட்ப மனிதரிடமிருந்தே வரவேண்டும்’



ஒருவர் தானே விருப்பப்பட்டு கைதியாக மாறமுடியும் என்பது சட்டப்படி சாத்தியமா என்பது தெரி யவில்லை. ஆனால், இதையொத்த ஓர் உண்மை நம் மீட்பு வரலாற்றில் சாத்தியமா னது.

பாவங்களால் சிறைப்பட்ட உலகை மீட்பது எப்படி என்ற கேள்வியும் பரிதவிப்பும் எழுந் தபோது இறைவன் அதற்கு விடை பகர்ந் தார். மனிதரின் மீட்பு மனிதரிடமிருந்தே வரவேண்டும் என்று தீர்மானித்தார். தன் மகனை மனிதரில் ஒருவராக அனுப்பிவைத் தார். இந்த எண்ணத்தை வெளிப்படுத்தும் ஒரு விவிலிய வாசகம் கடந்த ஞாயிறு நற் செய்தியில் பறைசாற்றப்பட்டுள்ளது. "தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்." (யோவான் 3: 16)

அடுத்தவர் மீது அன்பு கொள்வது, அடுத் தவருக்காக வாழ்வது, அடுத்தவரோடு வாழ்வது என்பதெல்லாம் அன்பின் பல பரிமாணங்கள். இவை அனைத்திலும் மிக உயர்ந்தது அடுத்தவராகவே வாழ்வது. இதைத்தான் இந்த நற்செய்தி வாசகம் உணர்த்துகிறது. அன்பின் ஆழத்தைச் சொல்லும் ஓர் இலக்கணம் இது.

அன்பின் ஆழத்தைக் கூறும் பல நூறு கதைகளைக் கேட்டிருக்கிறோம். இந்தக் கதைகளில் சொல்லப்படுவதெல்லாம் ஒரு சில நாட்களில் மணித்துளிகளில் காட்டப் படும் ஆழமான அன்பு உணர்வுகள். இந்த உணர்வுகள் உண்மையானவை, உன்னத மானவைதான்.

அன்பை வெளிப்படுத்தும் எத்தனையோ நிகழ்வுகள் நம் தனிப்பட்ட வாழ்விலும் நம் குடும்பங்களிலும் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. இவை கதை களாகவோ, செய்திகளாகவோ மாறுவ தில்லை. 'அகமகிழ்தல்' ஞாயிறன்று, நேரம் ஒதுக்கி நமது குடும்பங்களில் நடக்கும் அன்றாட நிகழ்வுகளை அசைபோடுவோம். ஒவ்வொரு நாளும் நடக்கும் இந்தச் சின்னச் சின்ன நிகழ்வுகளில் சொல்லாமல் சொல்லப் படும் உன்னத அன்பு உணர்வுகளை இன்று அசைபோடுவோம். பல குடும்பங்களில் உடல்நலம், மனநலம் குன்றிய குழந்தை கள், வாழ்க்கைத் துணை, பெற்றோர் என்று எத்தனையோ பேருக்கு ஒவ்வொரு நாளும் தாய், தந்தை, கணவன், மனைவி, உடன்பி றந்தோர் என்று ஒவ்வொருவரும் செய்துவ ரும் பணிவிடைகள் அற்புதமானவை.

பத்து, இருபது, முப்பது, நாற்பது என்று பல ஆண்டுகள், ஒவ்வொரு நாளும் தொடரும் இந்த அன்புப் பணிகளை கதைக ளாக ஒரு சில பக்கங்களில் சொல்லிவிடமு டியாது. வெளி உலகிற்கு தெரியாத வண்ணம் ஒவ்வொரு நாளும் அன்புப் பணியில் தங்க ளையே தகனமாக்கும் ஆயிரமாயிரம் அன்பு இதயங்களுக்காக இறைவனிடம் சிறப்பாக நன்றி சொல்வோம்.

'அன்பு' என்ற இந்த உன்னதமான உண் மைக்கு பல விபரீதமான இலக்கணங்களைப் புகட்டிவரும் உலகப் போக்கையும் இன்று சிந் திக்காமல் இருக்கமுடியவில்லை. உண்மை யான அன்பை, மகிழ்வை வெளிச்சத்திற்கு வரவிடாமல் தடுத்து நிறுத்தும் இருளைக் குறித்து கடந்த ஞாயிறு நற்செய்தியின் பிற்ப குதி இவ்வாறு சொல்கிறது:

(யோவான் 3: 1920)

ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர்... தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை.

ஒளியை நெருங்க அஞ்சி இருளில் வாழப் பழகிக்கொண்டால் தீமையில் ஊறிக்கிடக்கும் நம் எண்ணங்கள் சரியென்றே தோன்றும். இதற்கு நேர் மாறாக, உண்மைக்கேற்ப வாழ் பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள்.

இதனால் அவர்கள் செய்யும் அனைத்தை யும் கடவுளோடு இணைந்தே செய்கிறார்கள். (யோவான் 3: 21) என்று அந்த நற்செய்தி யின் இறுதியில் ஒரு சவாலை இறைமகன் கிறிஸ்து நமக்கு விடுக்கிறார்.

ஒளியாக விளங்கும் கிறிஸ்துவை நெருங் கிச் செல்ல, அவரைப்போல் ஒளியாக மாற நமக்கு விடுக்கப்படும் அழைப்பை ஏற்கப் போகிறோமா?

அல்லது இருளில் நம்மையே புதைத் துக்கொண்டு சுகம் காணப்போகிறோமா?

எது நம்மை உண்மையில் அகமகிழ் வோடு வாழவைக்கும் என்ற ஆன்ம ஆய்வை மேற்கொள்ள, தவக்காலம் தகுந்ததொரு காலம். அதனை உரிய விதத்தில் பயன்படுத் திக் கொள்வோம்.

ஜெரோம் லூயிஸ்...

# கிழக்கின் குரல்



# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை தண்டிக்க முடியாது

## மண்முனை மேற்கு பிரதேச சபை தலைவர்

புளியந்தீவு குறூப் நிருபர்

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான அடிப்படை ஆவணத்தில் இலங்கை அரசு கைச்சாத்திடவில்லை. ஆதலால் இலங்கை அரசை தண்டிக்க முடியாது என மண்முனை மேற்கு பிரதேச சபையின் தலைவரும் தமிழத் தேசிய கூட்டமைப்பின் பிரமுகருமான எஸ்.சண்முகராஜா தெரிவித்தார்.

ஊடக வியலாளர்களை நேற்று (15) சந்தித்தபோதே அவர் இதனை தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நீதி மன்றம், ஜெனீவா போன்ற விடயங்களை முன்வைத்து நமது அரசியல்வாதிகள் ஒருவருக்கொருவர் மல்லுக்கட்டுவது நின்றுவிடப்போவதில்லை மக்கள் இவர்களைப்பார்த்து கைகொட்டி சிரிக்கிறார்கள். ஜெனீவாவின் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேறப் போகிறது. அதில் இலங்கை அரசு நிச்சயம் இறுகும். இலங்கை அரசுக்கு சார்பான நாடுகளும் இல்லாமலில்லை. அதன் முன்னணியில், பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் இருக்கின்றன. இந்தியா இலங்கைக்கு எதிராக உள்ளக காய்நகர்த்தல்களை நடத்துவதாக புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.



இதனிடையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் இல்லையென்று அமைச்சர் சரத் வீர சேகர காட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

அவர் இலக்கு வைப்பது நௌபர் மௌலவியை யாகும். ஆகையால் இந்த விசாரணையில் இனிமேல் திருப்பங்கள் ஏற்படலாம்

**மேற்கெல்லை** அனுமதி பெற்ற நில அளவையாளர் கே.என்.ஏ.டப்லியு.சூரியாரச்சி என்பவரால் தயாரிக்கப்பட்ட நிலவரைப்பட இல.221 இல் துண்டு இல.2 மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது.

இக் காணியின் பரப்பளவு இருபது பெர்ச்சஸ் (A0: R0: P20). ) அளவிலான நிலம் மற்றும் அதன் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக திட்ட எண் 221/B ,லொட் இலக்கம். 06 இல் சித்தரிக்கப்பட்டுள்ளபடி சாலைக்கான இட ஒதுக்கீடு மற்றும் பிற பொதுவான உரிமைகள் அடங்களாக

பொதுவாக பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் பராமரிப்புடன், 24.07.1998 தேதியிட்ட திட்ட எண் 221 இன் படி, உரிமம் பெற்ற நில அலவையாளர் ஜே.ஏ.டி.ஏ.சேனானாயக்கவினால் தயாரிக்கப்பட்ட 228 ஆம் இலக்கத் திட்டத்தின் லொட் எண் 6 என மிகவும் துல்லியமாக வரையறுக்கப்படுகிறது. மாரபொல கிராமத்தில் உள்ள **கொங்கஹவத்த** காணி

**வடக்கெல்லை** துண்டு இல.01 மற்றும் 03 மூலமாகவும்,
**கிழக்கெல்லை** துண்டு இல.01,03,04 மற்றும் 05 மூலமாகவும்
**தெற்கெல்லை** துண்டு இல.05 பிரதான வீதி மூலமாகவும்,
**மேற்கெல்லை** துண்டு இல.01 மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது.

இக் காணியின் பரப்பளவு இருபது பெர்ச்சஸ் (A0: R0: P25.2). ) அளவிலான நிலம் மற்றும் அதன் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக அடங்களாக கம்பஹ காணி பதிவாளர் அலுவலகத்தில் தொகுதி/ ஃபோலியோ எண் K513/74 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் அல்லது இப்போது தொடக்கம் அவ்வப்போது தேவையேற்படக்கூடிய அசைவற்ற பயிர்கள் மற்றும் எந்திரத்தொகுதி உபகரணங்கள் நிறுவல்கள் மற்றும் சேவைகள் அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த நீர் வழ அமைப்பு உபகரணங்கள், தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் குளிரூட்டி உபகரணங்கள், மேற்கூரப்பட்ட காணிகளை ஒதுக்கீடு செய்யும் போது நிரந்தரமாக பொருத்திக் கொள்ள முடியும்.

**குருணாகல் பிரசித்த நொதாரிசு செல்வி எஸ்.எம்.ஹசினி உபுலிகா குமாரசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2017 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியிடப்பட்ட 212 மற்றும் 2019 ஜனவரி மாதம் 31 ஆம் திகதியிடப்பட்ட 440 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம், விஜேரத்ன ஆரச்சிலாகே க்ஷணிக் விஜேரத்ன என்பவரால் தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ க்கு ஈடுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.**

**நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி,**
2021 ஆம் ஆண்டு அணிவகுப்பு மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை
மு.ப.11.45 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**சொத்துக்கான பிரவேசம் : -**
நைவல-உடுகம்போலா சாலையில் இருந்து மாரபொல வரை, நைவல சந்தியிலிருந்து சுமார் 400 மீட்டர் தூரம் சென்று 10 அடி அகலமுள்ள சரளை சாலையில் வலதுபுறம் திரும்பி சுமார் 75 மீட்டர்கள் செல்லவும். ஓரளவு முடிக்கப்பட்ட மாடி வீட்டிக்கு வலதுபுறமாக சொத்து அமைந்துள்ளது.

தீர்மான அறிவிப்புகளுக்காக 2019 டிசம்பர் மாதம் 13 ஆம் தெதியிட்ட அரச வர்த்தமானி மற்றும் 2019 நவம்பர் மாதம் 29 ஆம் தெதியிட்ட தி அய்லன்ட்,திவயின மற்றும் தினக்குரல் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏலவிற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பனமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதார்ர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்,
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 500 ரூபா
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனை நிபந்தனைக்களுக்கான முத்திரை கட்டணம்

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்கானும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

சிரேஷ்ட முகமையாளர் - மையப்படுத்தப்பட்ட அறவிடுதல்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ
இலக்கம்: 40, நவம் மாவத்தை, கொழும்பு - 02
தொலைபேசி. 011 - 2448448 தொலைநகல். 011-2440262

*முன் அறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதோ கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com

DK's AUCTIONS
To Professionally Serve the Nation

it's what you want
www.adz.lk
Login
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

# விலைமனுவிற்கான அழைப்பு

## கைத்தொழில்கள் அமைச்சு

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

**புல்மோட்டையிலுள்ள இ.க.மலி இற்கு இரண்டு உதிரிப்பாகங்களுடன் Zircon Powdering இற்கு 10MNT/shift Jet Mill வடிவமைத்தல், வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல்.**

**Bid No.: LMSL/SUP/DPC/02/2020**

01. புல்மோட்டையிலுள்ள இ.க.மலி இற்கு இரண்டு உதிரிப்பாகங்களுடன் Zircon Powdering இற்கு 10MNT/shift Jet Mill வடிவமைத்தல், வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக இராஜகிரிய, சரண மாவத்தை, 341/ 21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| அம்ச இல. | பண்டங்களின் விளக்கம் | தேவைப்படும் விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|
| 01. | புல்மோட்டையிலுள்ள இ.க.மலி இற்கு இரண்டு உதிரிப்பாகங்களுடன் Zircon Powdering இற்கு 10MNT/shift Jet Mill வடிவமைத்தல், வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல். | 120,000.00 |

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து 2021.03.16 ஆம் திகதியிலிருந்து 2021.04.05 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். தொடர்பெண்கள்: 011-2882025/ 2883951/2883952.

04. 2021.03.16 ஆம் திகதியிலிருந்து 2021.04.05 ஆம் திகதி வரையும் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐயாயிரம் ரூபாவை (5,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், இராஜகிரிய, சரண மாவத்தை, 341/ 21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெற்றுக் கொள்ளப்படலாம்.

05. 2021.04.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் இராஜகிரிய, சரண மாவத்தை, 341/ 21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் மே/பா, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் 2021.04.06 ஆம் திகதியிலிருந்து 2021.06.21 ஆம் திகதி வரையும் அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

07. அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் பெயரில் வழங்கப்பட்டதாகவும் 2021.04.06 ஆம் திகதியிலிருந்து 2021.07.05ஆம் திகதி வரையும் அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

08. 2021.03.27ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இ.க.ம.லி தொகுதி (புல்மோட்டை)யில் கேள்விக்கு முன்னரான கூட்டம் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**

Repeat
Your ad
For
Better
Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## கட்டிட நிர்மாணங்கள் / திருத்தவேலைகள்

1. வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரித்தான நிறுவனங்களில் பின்வரும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலை விடயம் மற்றும் விலைக்கோரல் சங்கேத இல. | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைமனுப் பிணை முறி (ரூபா) | | CIDA தரம் |
|---|---|---|---|---|---|
| | | | வங்கிப் பிணை முறி | ரொக்கப் பணம் | |
| 01. | நிக்கவெரட்டிய ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக் கட்டிடத்தொகுதிக்கு மின் உயர்த்தியைப் பொருத்துதல் PDHS-NWP/P6/BHNik/PSDG/2021-02 | 5,000.00 | 150,000.00 | 75,000.00 | C-6/ C-5 மட்டும் |
| 02. | பொல்பித்திகம ஆதார வைத்தியசாலையில் மருத்துவர்களின் உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணித்தல் - தரைத் தளத்தின் மிகுதி வேலைகள் மற்றும் முதலாம் தளத்தை நிர்மாணித்தல் PDHS-NWP/P4/BHPol/PSDG/2021-03 | 5,000.00 | 150,000.00 | 75,000.00 | C-6/ C-5 மட்டும் |
| 03. | கல்கமுவ ஆதார வைத்தியசாலையில் தாதியர் உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணித்தல் (முதலாம் தளம்) PDHS-NWP/P3/BHGal/PSDG/2021-04 | 5,000.00 | 140,000.00 | 70,000.00 | C-6/ C-5 மட்டும் |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் மேற்கொள்ளப்படும் என்பதுடன் திறைசேரி செயலாளரின் 04/2016(ii)ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களின் தெரிவு மேற்கொள்ளப்படும்.

3. தகைமையைப் பூர்த்தி செய்துள்ள அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத விண்ணப்பதாரர்களினால் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2021-04-05ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் அன்றைய தினத்தில் பி.ப. 4.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இலவசமாக பி.ப. 4.00 மணி வரை பின்வரும் முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. சகல விலைமனுக்களுடனும் வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட விலைமனுப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பிணை முறி மூலம் அல்லது வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் சமர்ப்பிக்கலாம்.

5. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை முத்திரைக்குறி பொறித்து, இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய வேலை விடயம் மற்றும் விலைக்கோரல் சங்கேதத்தைக் குறிப்பிட்டு 2021-04-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம்.

6. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

7. இந்த பெறுகை தொடர்பிலான மேலதிக தெளிவுபடுத்தல்களை 037-2223479 எனும் எண்ணைத் தொடர்பு கொண்டு திட்டமிடல் பிரிவில் அல்லது 037-2221357 எனும் எண்ணில் உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**புவக்கஸ் சந்தி, நீர்கொழும்பு வீதி,**
**குருநாகல்.**

# (262ஆவது அதிகாரம்) உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

## 66எ பிரிவு

2012ஆம் ஆண்டு 22ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் (திருத்திய) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66எ பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் நுவரெலிய மாவட்டத்தின் தலவாக்கலை லிந்துல நகர சபையின் தலைவரினைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் மேற்குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத்தின் தேர்தல்கள் (திருத்திய) சட்டத்தின் 66 இ(4) பிரிவின் 2021.03.31ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தலவாக்கலை லிந்துல நகர சபை மண்டப ஒன்றுகூடல் அரங்கில் நடைபெறும் என்பதை தயவாய் அறியத் தருகின்றேன்.

**எச்.எம்.எம்.யூ.பீ. ஹேரத்**
**உள்ளூராட்சி ஆணையாளர்**
**உள்ளூராட்சித் திணைக்களம்**
**மத்திய மாகாணம்**

**2021 மார்ச் மாதம் 15ஆம் திகதி**
**மாகாண சபைக் கட்டடத் தொகுதி**
**பல்லேகலை**
**குண்டசாலை.**

# பெறுகை அறிவித்தல்

## கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

## அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் – கொலொன்னாவ

**Supply, Installation and Commissioning of Brand-New Multi-Purpose Wood Working Machine, Procurement of 32.71 MTs of Hot Rolled Structural Steel Universal Beams 101 Nos., Base Preparation, and Laying of Asphalt Concrete for 500m of 4m Wide Internal Roads of the Department of Government Factory, Kolonnawa, Supply, Installation and Commissioning, Testing and Handing Over of Backhoe Attachment for the JCB ROBOT 155 Skid Steer Loader, and Supply, Installation, Configuration, Testing and Training of a CCTV Monitoring System at the Department of Government Factory, Kolonnawa**

**பெறுகை இல. 3/1/4/19Q/03/CE/FA/591, 3/1/2/SA/20/RA/04/Re, 3/1/4/21Q/16/CE/FA/891, 3/1/4/21Q/14/CE/FA/791 மற்றும் 3/1/4/21Q/IT/CE/FA/371**

1. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு தவிசாளரால் புத்தம் புதிய பல்காரிய தச்சு வேலைகள் செய்யும் இயந்திரத்தை வழங்குதல், பொருத்தி செயற்படுத்திக் காண்பித்தல், சூடாக்கி சுருட்டப்பட்ட 32.71 மெ.தொ. கட்டமைக்கப்பட்ட 101 உருக்குப் பாலங்களின் பெறுகை, கொலன்னாவ அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களத்தின் 4 மீற்றர் அகலம் 500 மீற்றர் நீளம் கொண்ட உள்ளக வீதியின் மேற்புறத்தை சீரமைத்து கார்பட் இடுதல், ஜேசீபீ ரொபட் 155 வலுக்கிச் செல்லும் திசைக்கு கையாளக்கூடிய லோடர் இயந்திரத்திற்கான பெக்கோ பாகங்களை வழங்கி, பொருத்தி செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் கொலன்னாவை அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்திற்கு CCTV கண்காணிப்பு முறைமையொன்றை வழங்கி, பொருத்தி தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த கீர்த்தி வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்கல் / வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான காலம் கட்டளை வழங்கப்பட்டதன் பின் 08 வாரங்களாகும்.

2. நாடளாவிய ரீதியில் விலைமனுக்கள் கோரப்படும்.

3. அபகீர்த்தியாளர் (பிளெக் லிஸ்டட்) பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களை வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.

4. விபரக்குறிப்பு, வழங்கல் கால எல்லை மற்றும் வரைபு மற்றும் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

5. இதில் ஆர்வம் கொண்ட கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (பொறியியல் வேலை வழங்கல்) / வழங்கல் இயந்திரப் பொறியியலாளர் (தொலைபேசி: (011)2534579/ (011)2572351/2 நீடிப்பு 150 தொலைநகல் (011) 2532278) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் அரச வேலை நாட்களில் 2021-03-16ஆம் திகதி முதல் 2021-03-31ஆம் திகதி வரை பல்காரிய தச்சு வேலைகள் செய்யும் இயந்திரம், 101 எண்ணிக்கையான சூடாக்கி சுருட்டப்பட்ட உருக்குப் பாலங்களை வழங்குதல், உள்ளக வீதிகளுக்கு திருத்தவேலைகளைச் செய்து கார்பட் இடுதல் மற்றும் லோடர் இயந்திரங்களுக்கான பெக்கோ பாகங்களை வழங்குதல் என்பவற்றிற்கும், 2021-03-16ஆம் திகதி முதல் 2021-04-05ஆம் திகதி வரை CCTV கண்காணிப்பு முறைமையொன்றை வழங்கி, பொருத்துவதற்காகவும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரையில் அரசாங்கத் தொழிற்சாலைக்கு சமுகம் தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. 2021-03-16ஆம் திகதி முதல் 2021-03-31ஆம் திகதி வரை பல்காரிய தச்சு வேலைகள் செய்யும் இயந்திரம், 101 எண்ணிக்கையான சூடாக்கி சுருட்டப்பட்ட உருக்குப் பாலங்களை வழங்குதல், உள்ளக வீதிகளுக்கு திருத்தவேலைகளைச் செய்து கார்பட் இடுதல் மற்றும் லோடர் இயந்திரங்களுக்கான பெக்கோ பாகங்களை வழங்குதல் என்பவற்றிற்கும், 2021-03-16ஆம் திகதி முதல் 2021-04-05ஆம் திகதி வரை CCTV கண்காணிப்பு முறைமையொன்றை வழங்கி, பொருத்துவதற்காகவும் அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

7. இரு நகல்களிலான விலைமனுக்களை 2021-04-01ஆம் பல்காரிய தச்சு வேலைகள் செய்யும் இயந்திரம், 101 எண்ணிக்கையான சூடாக்கி சுருட்டப்பட்ட உருக்குப் பாலங்களை வழங்குதல், உள்ளக வீதிகளுக்கு திருத்தவேலைகளைச் செய்து கார்பட் இடுதல் மற்றும் லோடர் இயந்திரங்களுக்கான பெக்கோ பாகங்களை வழங்குதல் என்பவற்றிற்கும், 2021-04-06ஆம் திகதி CCTV கண்காணிப்பு முறைமையொன்றை வழங்கி, பொருத்துவதற்காகவும் மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிரதான பெறுகைக் குழு, 3வது மாடி, தொழிற்சாலை பொறியியல் அலுவலகம், அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவை எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

8. விலைமனுதாரரினால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கு இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் குறித்த படிவத்தின் பிரகாரம் கீழே தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணை முறி / வங்கிப் பிணை முறி அல்லது அப்பெறுமதிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் காசாளருக்கு பி.ப. 3.00 மணிக்கு முன் செலுத்தப்பட்ட பண வைப்புக்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும். அப்பிணை முறிகள் / வங்கிப் பிணை முறிகளின் குறைந்தபட்ச செல்லுபடியாகும் காலம் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

9. கேள்வியின் பெறுமதி 5,000.000.00 ரூபாவை விஞ்சும் பட்சத்தில் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு முகவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்து கொண்ட படிவத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான முன்னோடி தெளிவுபடுத்தல் 2021-03-16ஆம் திகதி பல்காரிய தச்சு வேலைகள் செய்யும் இயந்திரம், 101 எண்ணிக்கையான சூடாக்கி சுருட்டப்பட்ட உருக்குப் பாலங்களை வழங்குதல், உள்ளக வீதிகளுக்கு திருத்தவேலைகளைச் செய்து கார்பட் இடுதல் மற்றும் லோடர் இயந்திரங்களுக்கான பெக்கோ பாகங்களை வழங்குதல் என்பவற்றிற்கும், 2021-03-25ஆம் திகதி CCTV கண்காணிப்பு முறைமையொன்றை வழங்கி, பொருத்துவதற்காகவும் மு.ப. 11.00 மணிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் 3ம் மாடியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.

| | பெறுகை இல. | பொருட்களின் விபரம் | விலைமனுப் பிணை முறியின் அளவு | CIDA தரம் | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | 3/1/4/19Q/03/CE/FA/591 | புத்தம் புதிய பல்காரிய தச்சு வேலைகள் செய்யும் இயந்திரத்தை வழங்குதல், பொருத்தி செயற்படுத்திக் காண்பித்தல் (Supply, Installation and Commissioning of Brand-New Multi-Purpose Wood Working Machine) | 6,000.00 | - | 01-04-2021 |
| 02 | 3/1/2/SA/20/RA/04/Re | சூடாக்கி சுருட்டப்பட்ட 32.71 மெ.தொ. கட்டமைக்கப்பட்ட 101 உருக்குப் பாலங்களின் பெறுகை (Procurement of 32.71 MTs of Hot Rolled Structural Steel Universal Beams 101 Nos.) | 65,000.00 | - | 01-04-2021 |
| 03 | 3/1/4/21Q/16/CE/FA/891 | கொலன்னாவ அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களத்தின் 4 மீற்றர் அகலம் 500 மீற்றர் நீளம் கொண்ட உள்ளக வீதியின் மேற்புறத்தை சீரமைத்து கார்பட் இடுதல் (Base Preparation, and Laying of Asphalt Concrete for 500m of 4m Wide Internal Roads of the Department of Government Factory) | 77,000.00 | C 07 - Roads | 01-04-2021 |
| 04 | 3/1/4/21Q/14/CE/FA/791 | ஜேசீபீ ரொபட் 155 வலுக்கிச் செல்லும் திசைக்கு கையாளக்கூடிய லோடர் இயந்திரத்திற்கான பெக்கோ பாகங்களை வழங்கி, பொருத்தி செயற்படுத்திக் காண்பித்தல் (Supply, Installation and Commissioning, Testing and Handing Over of Backhoe Attachment for the JCB ROBOT 155 Skid Steer Loader) | 50,000.00 | - | 01-04-2021 |
| 05 | 3/1/4/21Q/IT/CE/FA/371 | கொலன்னாவை அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்திற்கு CCTV கண்காணிப்பு முறைமையொன்றை வழங்கி, பொருத்தி தேவையான பயிற்சிகளை வழங்குதல் (Supply, Installation, Configuration, Testing and Training of a CCTV Monitoring System at the Department of Government Factory, Kolonnawa) | 75,000.00 | - | 06-04-2021 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,**
**கொலொன்னாவை.**

2021-03-16.

### அற்றோணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

குருணாகல், கவுடாவத்த, மீபுரசெவன என்ற இடத்தில் வசிக்கும் ஏக்கநாயக்க முதியான்சேலாகே துசித் குமார பண்டார ஏக்கநாயக்க ஆகிய நான் எனது அற்றோணி அதிகாரியாக கொழும்பு ஹுனுபிட்டிய லேக் வீதி இலக்கம் 121 இல் வசிக்கும் நீளகாந்தி ஏக்கநாயக்க குணவர்தன என்பவரை நியமித்து குருணாகல் பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் நர்மதா மீவத்தன அவர்களினால் எழுதி சான்று படுத்தப்பட்ட இலக்கம் 632 மற்றும் 2017.11.05 ஆம் திகதியைக் கொண்ட 2020 டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அற்றோணி அதிகார பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்யப்பட்டதாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**ஏக்கநாயக்க முதியான்சேலாகே துசித் குமார பண்டார ஏக்கநாயக்க**

---

**எனது இல : MUN/LND/PMTAQ/05/04/06,**
**பிரதேச செயலகம், முந்தல்**
**2021.03.08**

**1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரிப்பு/திருத்தச் சட்டத்தின் திருத்தப்பிரகாரம் காணி சுவீகரிப்பு சட்டத்தின் (அத்தியாயம் 460ம்) பகுதியான 7வது பிரிவின் கீழான அறிவித்தல்**

கீழே அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணி பொது விடயங்களுக்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை 2218/59ம் இலக்க 2021.03.10ஆம் திகதியின் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் விஷேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணையைப் பார்க்கவும்**

**காணியின் பெயர்:**
முந்தல் மாதுரச

**கிராமத்தின் பெயர்:**
முந்தல்

**திட்டமிடல் கோவை இலக்கம் :**
PUT/MND/2018/310(2019.01.09)

**பிரதேச செயலாளர் பிரிவு:**
முந்தல்

**2021.03 மாதம் 08ஆம் திகதி**
**முந்தல் பிரதேச செயலகம்**

**பிரதேச செயலாளர்**
**முந்தல்**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**''சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு''**

## மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் 2021ஆம் வருடம்

### ஆரம்ப சுகாதார சேவை முறைமைகளை வலுப்படுத்தும் செயற்றிட்டம் (PSSP)

கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான முறையின் கீழ் கட்டிடப் பொருட்கள் மற்றும் மின்சார துணைப்பாகங்களைப் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் | 2021-03-16ஆம் திகதி முதல் 2021-04-07ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை போகம்பர, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இந்தக் காலத்தினுள் வருகை தந்து இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். |
| 02 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மற்றும் நேரம் | 2021-04-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். |
| 03 | விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் | 2021-04-07ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். |
| 04 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இடம் | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. இல. 56, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி. |
| 05 | விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் | இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென பெயரிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். |
| 06 | விலைக்கோரலுக்கு இயைபான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு | • கண்டி. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளர் அல்லது கொள்வனவிற்கான விடயப்பொறுப்பு அதிகாரியிடமிருந்து தொலைபேசி இல. 081-2236452/ 081-2232456 |
| 07 | ஏனையவை | • சகல விலைமனுக்களும் மதிப்பீட்டுக் குழுவுக்கு அனுப்பப்படும் <br> • விலைக்கோரலைக் கையளிக்கும் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**கண்டி.**

---

# பெறுகை அறிவித்தல்

## களனி பிரதேச சபை

### களனி பிரதேச சபைக்குச் சொந்தமான கிரிபத்கொட வாரசந்தையை 2021.05.01 முதல் 2021.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி கோரல்

களனி பிரதேச சபைக்குச் சொந்தமான கிரிபத்கொட வார சந்தையை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் 2021.03.29 பி.ப. 3.00 வரை களனி பிரதேச சபையின தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2021 மார்ச் 30 மு.ப. 10.00 வரை ஏற்கப்படும்.

கேள்வி சமர்ப்பிக்கும் மாதிரிப்பத்திரங்கள், எழுத்து மூல வேண்டுதலுடன் மீளளிக்கப்படாத ரூ. 3000.00 படிவக் கட்டணம் மற்றும் கீழே தரப்பட்டுள்ள வேண்டப்படுகின்ற சொத்துக்களுடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பின்னரே விநியோகிக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன் அப் பிரதிகள் இரண்டையும் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு, வேறுவேறாக பொறியிட்டு மீண்டும் அவ்உறைகளை ஒரு உறையில் இட்டு செயலாளர், களனி பிரதேச சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி தாரர்களால் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி விடயத்தையும் குறிப்பிடல் வேண்டும் குறைந்த பட்ச கேள்விக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்விகள் நிராகரிக்கப்பட்டு பிணைத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

கேள்விகள் திறக்கப்படுதல் 2021.03.30 மு.ப. 10.00 இற்கு இவ் அலுவலகத்தில் இடம் பெறும் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

வெற்றிகரமான கேள்விதாரர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்பு கேள்விதாரர்களால் அங்கீகரிக்கப்பட்ட கேள்வித் தொகையில் மாதாந்த வாடகைத் தொகைபோன்று 03 மாத தொகையை இவ் அலுவலகத்தில் வைப்புச் செய்து ஒப்பந்தம் ஒன்றிற்கு உட்படல் வேண்டும். அவ்வாறு அரிசிற்கு செலுத்த வேண்டிய வரித் தொகையையும் செலுத்துதல் வேண்டும் அதற்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைக்காக சொத்துப் பிணை அல்லது ஏற்கக்கூடிய காப்பறுதி திட்டத்தை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், கேள்விதாரர்களால் களனி பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் இடைக்கால மசோதா மற்றும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

கேள்வியை ஏற்றுக்கொள்ளல் பற்றிய இறுதித் தீர்மானம் களனி பிரதேச சபை கேள்விச் சபைக்கு உரியது.

தொலைபேசி இலக்கம் - 0112914110

**அட்டவணை**

| தொடர் இல | விற்பனைத் தளம் | குறைந்த பட்ச கேள்வி | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | கிரிபத்கொட வார சந்தை | ரூ. 3,733,334.00 | ரூ. 37,334.00 | ரூ. 3,000.00 |

**டபிள்யூ.டீ. சாந்தி குமுதினீ**
**தலைவர்,**
**களனி பிரதேச சபை**
**2021.03.15**

---

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

**மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.**

## மத்திய மாகாணம் -02 - மார்ச் 2021

**பரப்பளவு - Nuwaraeliya Electrical Engineer Area**

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Rikillagaskda Electricity Consumer Service Center**

2021.03.30 09.00 - 17.00
**இடம்:**
ராத்மெத்தியா II (சமில்கோ), நடுத்தர அளவிலான வீட்டுவசதி திட்டம், ராத்மெத்தியா

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Nuwaraeliya Electricity Consumer Service Center**

2021.03.16 09.00 - 17.00
**இடம்:**
கார்கில்ஸ் உணவு நகரம், கார்ல்டன் விளையாட்டு வலையமைப்பு, ஜனாதிபதி மாளிகை, செயின்ட் ஆண்ட்ரூஸ் ஹோட்டல், பிதுருதலகல ராடார் நிலையம், தொலைக்காட்சி நிலையம் பிதுருதலகல, விமானப்படை பிதுருதலகலா, கார்கில்ஸ் மைதானம், வங்கி RE இன் கீழ், பழைய பஜார்

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Thawalanthenna Electricity Consumer Service Center**

2021.03.18 09.00 - 16.00
**இடம்:**
கரகஸ்தலவா க்ளென்லோச்

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Walapane Electricity Consumer Service Center**

2021.03.20 09.00 - 17.00
**இடம்:**
நீர் வாரியம் வெரெல்லா, உதமதுரா, மல்லகம, மீரியபெட்டா, தம்பரே, மரிஸ்வத்தா, போலகண்டவாலே, அம்பனெல்லா, தெரீபா கல்கண்டவாலா, நில்டாண்டாஹின்னா, ரூபே நாயக்கலே, கோரடியகொல்லா, எகோடகந்தா, வெவடென்னா, வலஹிந்த இம்புலபதான திட்டம், தேயிலை தொழிற்சாலை, கலகன்வத்தே, டெரிபாஹா (மருத்துவமனைக்கு அருகில்), வெலிஹிந்த, வெரெல்லபதான

2021.03.21 09.00 - 17.00
**இடம்:**
போலகண்டவாலே, வெலிஹிந்த, மரிஸ்வத்தா, வலஹிந்த இம்புலபதான திட்டம், கலகன்வத்தே, மல்லகம, தெரீபா கல்கண்டவாலா, மீரியபெட்டா, ரூபே நாயக்கலே, டெரிபாஹா (மருத்துவமனைக்கு அருகில்)

**பரப்பளவு - Nawalapitiya Electrical Engineer Area**

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Nawalapitiya Electricity Consumer Service Center**

2021.03.16 08.30 - 17.30
**இடம்:**
இங்குரு ஓயா -11

2021.03.25 08.30 - 17.00
**இடம்:**
இங்குரு ஓயா -11

2021.03.17 09.00 - 16.00
**இடம்:**
பாகில் எஸ்டேட்

**பரப்பளவு - Ginigathhena Electrical Engineer Area**

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Norton Electricity Consumer Service Center**

2021.03.20 10.00 - 16.00
**இடம்:**
பாகத்துலுவ

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Maskeliya Electricity Consumer Service Center**

2021.03.30 08.00 - 17.00
**இடம்:**
கிர்கோஸ்வால்ட் தொழிற்சாலை, சாம்பியன் எஸ்டேட், ∴பெட்ரோசோ தேயிலை தொழிற்சாலை, துணிகர எஸ்டேட், லோயார்ன் எஸ்டேட், கொட்டியகால எஸ்டேட், போகவான தொழிற்சாலை, பொகவந்தலாவா எஸ்டேட், நோர்வூட் எஸ்டேட், டின்சியன்ட் எஸ்டேட், கியூ எஸ்டேட், எஸ்.டி. தெரசா எஸ்டேட், மொரார் எஸ்டேட், அரியபுர ஸ்ரிபுரா, கொட்டியகலா யு / டி, ஆல்டி, நோர்வூட் டவுன், சிங்ராவட்டா, ∴பெட்ரோசோ ஆர்.இ., பொகவந்தலாவ டவுன், எஸ்.டி.ஜான் டெலரி, போய்ட்ரி எஸ்டேட், மில்க்போர்டு நோர்வுட், பொகவான ஆர்.இ., சாம்பியன் பஜார், ராபில் மேல் பிரிவு

**பரப்பளவு - Mawanella Electrical Engineer Area**

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Hemmathagama Consumer Service Center**

2021.03.16 09.00 - 17.00
**இடம்:**
அம்பலவ-பாலத்கம

2021.03.19 09.00 - 17.00
**இடம்:**
அம்பலவ-பாலத்கம

2021.03.23 09.00 - 17.00
**இடம்:**
கெஹல்பண்ணாலா

2021.03.27 09.00 - 17.00
**இடம்:**
கெஹல்பண்ணாலா

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Mawanella Consumer Service Center**

2021.03.27 09.00 - 16.00
**இடம்:**
பஹாலா கடுகண்ணவா - வட்டவங்குவ

**பரப்பளவு - Kegalle Electrical Engineer Area**

**மின் பாவனையாளர் சேவைநிலையம்**
**Thulhiriya Consumer Service Center**

2021.03.16 08.00 - 17.00
இடம் : காண்டேகம

2021.03.23 08.00 - 17.00
இடம் : காண்டேகம

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Rambukkana Consumer Service Center**

2021.03.19 09.00 - 17.00
இடம் : புவக்மோட் ஆர்.இ., தம்புல்லா (டெலிவாலா ஆர்.இ, பதவிகம்போலா பதவிகம்போலா ஜே.சி. (ஜனதிபதி வித்யாலயா), திமல்போலா, மீடுமா கோயில்

**மின் பாவனையாளர் சேவைநிலையம் Kegalle Consumer Service Center**

2021.03.17 09.00 - 17.00
இடம் : சனசா , மகுரா, அம்பலன்பிட்டி, எகிரியகலா ஆர்.இ, டயலொக் டவர் ஹெட்டிமுல்லா (டயலொக் காங்கீரியா), அதுகோடா தமுனுபோலா ஆர்.இ., ரணபனா, கோலிண்டா எஸ்டேட், புலுகஹதேனியா, புஸ்ஸலடேனியா, பரகம்மனா, புல்ருப்பா, மல்வத்த

2021.03.25 10.00 - 15.00
இடம் : இராணுவ முகாம், சனசா, இளைஞர் படைகள், மல்வத்த நில்மல்கோடா, டிக்கெல்லா, எகிரியகலா ஆர்.இ, கோலிண்டா எஸ்டேட், அதுகோடா தமுனுபோலா ஆர்.இ., புலுகஹதேனியா, வால்டேனியா ஆர்.இ., புல்ருப்பா, வால்டேனியா ஆர்.இ., ரணபனா, பரகம்மனா, புஸ்ஸலடேனியா

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Moronthota Consumer Service Center**

2021.03.24 09.00 - 17.00
**இடம்:**
ஒட்டு பலகை (லக்மேனியர் மீடெனியா), ஹப்புவிதா உதகம, மீடெனியா, உடுகம / பாண்டேனியா, ஹெட்டிமுல்லா ஜக்ஷன், வதுரா

**பரப்பளவு - Peradeniya Electrical Engineer Area**

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Yatinuwara Consumer Service Center**

2021.03.18 08.30 - 17.00
**இடம்:**
புதிய பேண்ட் சா மில், ஜிரகாமா டெலிகாம், ஜிரகாமா தேயிலை தொழிற்சாலை, முன்வதகுட, உடவேலா, குருண்டுவட்டா, நந்திதலவா, சியம்பலகட

2021.03.26 08.30 - 17.00
**இடம்:**
தேஹிவத்தா தேயிலை தொழிற்சாலை, ஹபுகஹயதாதென்னா, தஸ்கரா, உயன்வத்தா

2021.03.27 08.30 - 17.00
**இடம்:**
மாலிகடென்னா பூஸ்டர் பம்ப் நிலையம், தம்பகோடா (நீர் வழங்கல்), ஹலியதா, ஜெயசிரிகம, மாமுடவேலா, யஹலத்தண்ணா

**இடம்:**
புதிய பேண்ட் சா மில், ஜிரகாமா டெலிகாம், ஜிரகாமா தேயிலை தொழிற்சாலை, முன்வதகுட, உடவேலா, குருண்டுவட்டா, நந்திதலவா, சியம்பலகட

**மின் பாவனையாளர் சேவை நிலையம்**
**Eriyagama Consumer Service Center**

2021.03.17 08.30 - 17.00
**இடம்:**
எஸ்.எல்.பி.எஸ் செங்கடகலா

**பிரதி பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்)**
**இலங்கை மின்சார சபை.**
**இல. 04, அஸ்கிரிய வீதி,**
**கண்டி.**
**தொ.பே. - 081-223400**

*வளமான வாழ்விற்கு மின்சாரம்*

*நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்*

## கிண்ணியா அக்செரியன் சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

# சம்பியன் கிண்ணத்தை சுப்பர் கிங் அணி சுவீகரித்துக் கொண்டது







**கிண்ணியா மத்திய நிருபர்**

கிண்ணியா அக்செரியன் சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரை வெற்றி கொண்டு, 2021 ஆண்டின் சம்பியன் கிண்ணத்தை சுப்பர் கிங் அணி சுவீகரித்துக் கொண்டது.

எட்டு அணிகள் பங்கு கொண்ட இந்த தொடரின் இறுதிப் போட்டி நேற்று (14) கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் நடைபெற்றது.

யூ என் வி நிறுவனத்தின் பிரதான அனுசரணையோடு நடைபெற்ற இந்த தொடரின் முதல் அரையிறுதி ஆட்டத்தில சுப்பர் கிங் மற்றும் ஜுபிடர் ஆகிய அணிகள் மோதின.

இதில் 3:1 என்ற கோல் அடிப்படையில் ஜுபிடர் அணியை வெற்றி பெற்று, தனது இறுதிப்போட்டிக்கான கனவை நனவாக்கியது சுப்பர் கிங் அணி.

இந்த தொடரில் சுப்பர் கிங் அணி மூன்று போட்டிகளைச் சந்தித்து மொத்தமாக 4 கோல்களைப் போட்டு 9 புள்ளிகளைப் பெற்று 2வது இடத்துக்கு வந்தது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சுப்பர் பைட்டர் மற்றும் ரேஸின் ஸ்டார் ஆகிய இரு அணிகளும் மோதின.

இந்தப் போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதனல் வெற்றி தோல்வி பெனால்டி உதை மூலம் நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் ரேஸின் ஸ்டார் அணி 6 : 5 என்ற கோல் அடிப்படையில் பெனால்டி உதை மூலம் போட்டியை வென்று இறுதியாட்டத்துக்கான தகுதியை தனதாக்கிக் கொண்டது.

ரேஸின் ஸ்டார் அணி இந்த தொடரில் 3 போட்டிகளில் விளையாடி மொத்தம் 3 கோல்களைப் பெற்று, 7 புள்ளிகளுடன் முதல் பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் ரேஸின் ஸ்டார் அணியும் சுப்பர் கிங் அணியும் இறுதி ஆட்டத்தில் மோதுவதற்கான தகுதியைப் பெற்றுக் கொண்டன.

பார்வையாளர்களின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்த ஆட்டம் இறுதி வரை இரு அணிகளும் தங்களது பலத்தை நிரூபிக்கும் வகையில் அமைந்திருந்தது.

பலத்த போராட்டடத்துக்கு மத்தியில் ஆட்டம் நிறைவடை சில நிமிடங்கள் இருக்கையில், சுப்பர் கிங் அணி கோல் ஒன்றைப் போட்டி, 1: 0 என்ற கோல் கணக்கில் வெற்றிக் கனவை நனவாக்கி 2021 ஆம் ஆண்டுக்கான அக்செரியன் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்த தொடரின் 3வது இடத்தை ஜுப்பிடர்ஸ் அணி பெற்றுக் கொண்டது.

இந்த தொடரில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு முறையே தலா 50,000 40,000, 30,000 ஆயிரம் ரூபா பணப்பரிசும் கிண்ணமும் வழங்கப்பட்டன .

நான்காம் இடத்தைப் பெற்ற அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் போட்டியில் பங்கு கொண்ட ஏனைய அணிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன. தொடரின் சிறப்பாட்டக்காரருக்கு மௌண்டன் பைசிகள் ஒன்றும் கேடயமும் வழங்கப்பட்டதோடு, தொடரின் சிறந்த கோல் காப்பாளராக தெரிவு செய்யப்பட்டவருக்கு 5,000 பணப் பரிசும் கேடயமும் வழங்கப்பட்டது.

பிரதான அனுசரணையாளரான யூஎன்வி நிறுவனத்தின் பணிப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் பிரதம அதிதியாக கலந்து பரிசில்களை வழங்கி வைத்தார்.

தொடருக்கான விளம்பர அனுசரணை,போட்டியின் இணை அனுசரணை ஆகிய வற்றை மைலோ நிறுவனம் செய்திருந்தது.

Nestlé MILO



## இலங்கை அணிக்கு எதிரான

# ஒருநாள் தொடரினையும் கைப்பற்றிய மேற்கிந்திய தீவுகள்

சுற்றுலா இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் இடையே நடைபெற்று முடிந்திருக்கும் மூன்றாவது ஒருநாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றியினைப் பதிவு செய்திருக்கின்றது.



இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணியினர் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரினையும் 30 எனக் கைப்பற்றி, இலங்கை வீரர்களை இந்த ஒருநாள் தொடரில் வைட்வொஷ் செய்திருக்கின்றனர்.

இலங்கை அணி இந்த தோல்வியோடு தமது மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்தில் ரி 20 தொடருடன் சேர்த்து, ஒருநாள் தொடரினையும் இழந்திருக்கின்றது.

இலங்கை – மேற்கிந்திய தீவுகள் இடையிலான ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் (14), அன்டிகுவா நகரில் ஆரம்பமாகியது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் தலைவர் கீரன் பொலார்ட் இலங்கை கிரிக்கெட் அணியினை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

இதன்படி, போட்டியில் முதலில் துடுப்பாடிய இலங்கை கிரிக்கெட் அணியினர் இந்த ஒருநாள் தொடரினை ஏற்கனவே, 20 எனப் பறிகொடுத்திருந்த காரணத்தினால் ஆறுதல் வெற்றி ஒன்றினை எதிர்பார்த்த வண்ணம் தமது ஆட்டத்தினை தொடங்கினர்.

தொடர்ந்து முதல் துடுப்பாட்டத்தினை ஆரம்பத்தினை இலங்கை அணி, மேற்கிந்திய தீவுகளின் பந்து வீச்சினை சமாளிக்க தடுமாற்றம் காட்டிய போதும் இளம் துடுப்பாட்ட வீரர்களான அஷேன் பண்டார மற்றும் வனிந்து ஹஸரங்க ஆகியோர் சிறப்பாக செயற்பட்டிருந்தனர்.

இந்த வீரர்களின் துடுப்பாட்ட உதவியோடு இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்கள் பெற்றது.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் சார்பாக, இலங்கை அணியின் 07ஆம் விக்கெட்டுக்காக 118 ஓட்டங்களாக இணைப்பாட்டமாகப் பகிர்ந்த வனிந்து ஹஸரங்க, அஷேன் பண்டார ஜோடியில், வனிந்து ஹஸரங்க தனது கன்னி ஒருநாள் அரைச்சதத்துடன் 60 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 7 பௌண்டரிகள் அடங்கலாக 80 ஓட்டங்களை எடுத்தார். மறுமுனையில், அஷேன் பண்டார தனது 02ஆவது அரைச்சதத்துடன் 55 ஓட்டங்களை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சு சார்பில் அகில் ஹொசைன் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், அல்ஷாரி ஜொசேப் மற்றும் ஜேசன் மொஹமட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்வீதமும் சாய்த்திருந்தனர்.

இதன் பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 275 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்குத் துடுப்பாடிய மேற்கிந்திய தீவுகள் அணியினர், போட்டியின் வெற்றி இலக்கினை 48.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து அதனை 276 ஓட்டங்களுடன் அடைந்தனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றிக்கு உதவியாக இருந்த டர்ரன் ப்ராவோ, தன்னுடைய 04ஆவது சதத்துடன் 4 சிக்ஸர்கள் மற்றும் 5 பௌண்டரிகள் 132 பந்துகளில் 102 ஓட்டங்களை எடுத்தார். அதேநேரம், ஷேய் ஹோப் (64), அணித்தலைவர் கீரன் பொலார்ட் ஆகியோரும் அரைச்சதங்கள் பெற்று தமது அணியின் வெற்றியினை உறுதி செய்திருந்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் சுரங்க லக்மால் 56 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைச் சாய்த்திருந்த போதும் அது வீணாகியிருந்தது.

போட்டியின் ஆட்டநாயகன் விருதினை மேற்கிந்திய தீவுகள் அணியின் டர்ரன் ப்ராவோ பெற்றுக்கொள்ள, தொடர் நாயகனாக மேற்கிந்திய தீவுகள் அணியின் துடுப்பாட்ட நட்சத்திரம் ஷேய் ஹோப் தெரிவாகினார். ஒருநாள் தொடர் நிறைவுக்கு வந்திருக்க இலங்கை – மேற்கிந்திய தீவுகள் அணிகள் பங்குபெறும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

# 2வது டெஸ்ட் - சிம்பாப்வேவை வீழ்த்தி தொடரை சமன் செய்தது ஆப்கானிஸ்தான்



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 2வது இன்னிங்சில் சிம்பாப்வே அணி 365 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டையும் இழந்தது.



சிம்பாப்வே மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. தொடக்க ஆட்டக்காரர் இப்ராகிம் சட்ரன் அரை சதம் அடித்து 72 ஓட்டங்களில் வெளியேறினார். ஹஷ்மத்துல்லா ஷஹிதியும், அஸ்கர் ஆப்கனும் பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினர். அஸ்கர் ஆப்கன் 164 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து அபாரமாக ஆடிய ஷஹிதி இரட்டை சதமடித்து அசத்தினார். இதனால் ஆப்கானிஸ்தான் அணி 160 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 545 ஓட்டங்கள் எடுத்து ஓட்டத்தை இடைநிறுத்தியது.

அடுத்து ஆடிய சிம்பாப்வே அணி முதல் இன்னிங்சில் 287 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தொடக்க ஆட்டக்காரர் பிரின்ஸ் மாஸ்வேர் அரைச் சதமடித்து 65 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கெவின் கவுசா, முசகண்டா ஆகியோர் தலா 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். சிக்கந்தர் ராசா பொறுப்புடன் ஆடி 85 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கடைசி கட்டத்தில் சபக்வா 33 ஓட்டங்கள் எடுத்தார்.

பாலோ ஒன் பெற்ற சிம்பாப்வே அணி இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்தது. அந்த அணியின் தலைவர் சீன் வில்லியம்ஸ் பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினார். இவர் 8வது விக்கெட்டுக்கு டிரிபானோவுடன் ஜோடி சேர்ந்து 187 ஓட்டங்கள் சேர்த்தார். டிரிபானோ 95 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில், சிம்பாப்வே அணி இரண்டாவது இன்னிங்சில் 365 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சீன் வில்லியம்ஸ் 151 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆப்கானிஸ்தான் சார்பில் ரஷித் கான் 7 விக்கெட்டு வீழ்த்தினார்.

இதையடுத்து, 108 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது. 26.1 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ரஹ்மத் ஷா அரை சதமடித்து 58 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இப்ராகிம் சட்ரன் 29 ஓட்டங்களில் வெளியேறினார்.

ஆட்ட நாயகன் விருது ஹஷ்மத்துல்லா ஷஹிதிக்கு வழங்கப்பட்டது. தொடர் நாயகன் விருது சீன் வில்லியம்சுக்கு வழங்கப்பட்டது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.